# செய்யுள் திரட்டு

முதல் பருவம் - பகுதி - I, தமிழ் தாள் - I

(2020-2021ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)


பாரதியார் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்.

# செய்யுள் திரட்டு

முதல் பருவம் - பகுதி - I, தமிழ் தாள் - I

(2020 - 2021ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

(செய்யுள், சிறுகதை, இலக்கணம், இலக்கிய வரலாறு, மொழிபெயர்ப்பு)

பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

## பொருளடக்கம்

### முதல் பருவம்


**அலகு - I**

| | | | |
|---|---|---|---|
| 1. | எங்கள் தாய் | - பாரதியார் | 7 |
| 2. | தமிழின் இனிமை | - பாரதிதாசன் | 9 |
| 3. | ஒரு கந்தல் துணியின் கதை | - கண்ணதாசன் | 11 |
| 4. | வருங்கால மனிதன் வருக! | - தமிழ் ஒளி | 14 |
| 5. | ஓடு... ஓடு... சங்கிலி | - சிற்பி | 16 |
| 6. | இது வித்தியாசமான தாலாட்டு | - வைரமுத்து | 19 |

**அலகு - II**

| | | | |
|---|---|---|---|
| 7. | காலம் பிரசவித்த மற்றொரு காலம் | - பச்சியப்பன் | 23 |
| 8. | காடு | - பழநி பாரதி | 25 |
| 9. | இயற்கைக்குத் திரும்புவோம் | - தேவயானி | 27 |
| 10. | இலக்கியத்தில் பெண்கள் | - செல்வகுமாரி | 30 |
| 11. | ஹைக்கூக் கவிதைகள் | - அறிவுமதி | 34 |
| 12. | நாட்டுப்புறப்பாடல்கள் | | |
| | 1. தாலாட்டு | | 36 |
| | 2. தொழிற்பாடல்கள் | | 37 |

**அலகு - III**

**தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் NCBH-வெளியீடு**

**அலகு - IV**

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
2,. ஹைக்கூக் கவிதைகள்
3. பாரதி, பாரதிதாசன் இலக்கியப்பணி
4. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

**அலகு - V**

1. வல்லினம் மிகுமிடம்
2. வல்லினம் மிகாவிடம்
3. தொடரில் வழுஉச் சொற்களை நீக்கி எழுதுதல்
4. ஒருமை பன்மை மயக்கம் நீக்கி எழுதுதல்

   மொழிபெயர்ப்புப் பகுதி -

   ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தல்,

   பொதுப்பகுதி, அலுவலகப்பகுதி.

# பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் – 46

## முதல் பருவம் – பகுதி.I தமிழ் தாள் I

(2020-2021ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

## அலகு.III தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் – NCBH வெளியீடு

1. குளத்தங்கரை அரசமரம் – **வ.வே.சு. ஐயர்**
2. காலுனும் கிழவியும் – புதுமைப்பித்தன்
3. சுமை பேதம் – ஜெயகாந்தன்
4. (அ)ஹிம்சை – கோ.தர்மன்
5. அன்புக்கும் மேலே – ஆர்.சூடாமணி
6. சூடிய பூ சூடற்க – நாஞ்சில் நாடன்
7. நரிப்பல் – வெ.இறையன்பு
8. தனிமை – ராஜம் கிருஷ்ணன்
9. நவீனம் – சுப்ரபாரதி மணியன்
10. தொண்டன் – டி.செல்வராஜ்

# முதல் பருவம்

பகுதி - **I,** தமிழ் - தாள் **- I**

## வினாத்தாள் அமைப்பு

**காலம்: 3 மணிநேரம்** **மொத்த மதிப்பெண்கள்: 75**

**பகுதி - I தமிழ் - தாள் I**

**பிரிவு - அ** (10 X 1 = 10)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**பிரிவு - ஆ** (5 X 5 = 25)

| | | |
|---|---|---|
| *செய்யுள் திரட்டு* | - | *2 வினாக்கள்* |
| *சிறுகதை* | - | *2 வினாக்கள்* |
| *அலகு-* IV | - | *1 வினா* |

**பிரிவு - இ** (5 X 8 = 40)

**கட்டுரை வடிவில் விடை எழுதுக**

| | | |
|---|---|---|
| *செய்யுள்* | - | *2 வினாக்கள்* |
| *சிறுகதை* | - | *1 வினா* |
| *இலக்கிய வரலாறு* | - | *1 வினா* |
| *மொழிபெயர்ப்பு* | - | *1 வினா* |

***குறிப்பு:*** *ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் "இது" அல்லது "அது" என்ற வகையில், அந்தந்த அலகுகளிலிருந்து அமையவேண்டும்.*

# 1. எங்கள் தாய்

**- பாரதியார்**

*சின்னச்சாமி ஐயர் இலக்குமி அம்மாள் இணையருக்கு திசம்பர் 11, 1882இல் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும் 'சுப்பையா' என்றே அழைக்கப்பட்டார். பாரதி ஒரு கவிஞர் எழுத்தாளர், பத்திரிகையாளர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதி ஆவார். இவரைப் 'பாரதியார்' என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர்.*

*நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, எனப் பல பொருண்மைகளில் இவரது கவிதை, கட்டுரை, சிறுகதைகள் அமைகின்றன.*

*இங்கு பாரதத்தாயின் தன்மைகளாக விளங்கும் கூறுகளை 'எங்கள் தாய்' எடுத்துக்காட்டுகின்றது.*

**காவடிச் சிந்தில் 'ஆறுமுக வடிவேலனே' என்ற மெட்டு**

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.

யாரும் வகுத்தற் கரிய பிராயத்தள்
ஆயினு மேயெங்கள் தாய் - இந்தப்
பாருள்ளந் நாளுமோர் கன்னிகை என்னப்
பயின்றிடு வாள் எங்கள் தாய்.

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.

நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள் - தனை

மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
    வீட்டிடு தோளுடை யாள்.

அறுபது கோடி தடக்கைக ளாலும்
    அறங்கள் நடத்துவள் தாய் - தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
    செய்து கிடத்துவள் தாய்.

பூமி யினும்பொறை மிக்குடை யாள்பெரும்
    புண்ணிய நெஞ்சினள் தாய் - எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
    துர்க்கை யனையவள் தாய்.

கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
    கைதொழு வாள்எங்கள் தாய் - கையில்
ஒற்றைத் திகிரிகொண் டேழுல காளும்
    ஒருவனை யுந்தொழு வாள்

யோகத்தி லேநிக ரற்றவள் உண்மையும்
    ஒன்றென நன்றறி வாள் - உயர்
போகத்தி லேயும் நிறைந்தவள் எண்ணரும்
    பொற்குவை தானுடை யாள்.

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
    நயம்புரி வாள்எங்கள் தாய் - அவர்
அல்லவ ராயின் அவரைவி ழுங்கிப்பின்
    ஆனந்தக் கூத்திடு வாள்.

வெண்மை வளரிம யாசலன் தந்த
    விறன்மக ளாம்எங்கள் தாய் - அவள்
திண்மை மறையினும் தான்மறை யாள்நித்தம்
    சீருறு வாள் எங்கள் தாய்.

# 2. தமிழின் இனிமை

**- பாரதிதாசன்**

*புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் 29-04-1891இல் புதுவையில் கனகசபை முதலியார் இலக்குமி அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்தார். இவருடைய இயற்பெயர் கனக சுப்புரத்தினம். பாரதியாரின் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்ற தம் பெயரை மாற்றிக் கொண்டார். எழுச்சிமிக்க தம் எழுத்தால் 'புரட்சிக்கவி' என்றும் 'பாவேந்தர்' என்றும் அழைக்கப்படுபவர். இவருடைய படைப்புகள் தமிழ்நாடு அரசினால் 1990-இல் பொது உடைமையாக்கப்பட்டன, இங்கு தமிழின் இனிமையை உள்ளம் குளிர, நாவூற எடுத்துரைக்கின்றது. இவரது 'தமிழின் இனிமை' கவிதை.*

**கண்ணிகள்**

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும் - ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும் - வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும் - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும் - நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி - அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிகு உடையாள் அன்னை - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள் - அன்பைக்

கொட்டி வளர்க்கும் பிள்ளை,
அயலவ ராகும் வண்ணம் – தமிழ்என்
அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம் – ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம் – ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,
மாலைச் சுடரினில் மூழ்கும் – நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர் – தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?

செந்நெல் மாற்றிய சோறும் – பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை – கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மது ரஞ்செய் கிழங்கு – காணில்
நாவிலி னித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

## 3. ஒரு கந்தல் துணியின் கதை

**- கண்ணதாசன்**

*இராமநாதபுர மாவட்டத்தில் சிறுகூடற்பட்டியில் சாத்தப்பன் விசாலாட்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24.06.1927 அன்று கண்ணதாசன் பிறந்தார். இவரது இயற்பெயர் முத்தையா.*

*இவர் தம் கவிதைகள் இனிமை தவழும் எளிய இசையோவியங் களாகும். தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள் பற்றிய வீரமாகவும், சோகமாகவும், இடையிடையே நகைச்சுவையாகவும், சொல்லினிமை யோடு பாடியுள்ளார்.*

*திரையிசைப் பாடல்களால் நிகரற்ற புகழ் பெற்றவர். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, கவிதாஞ்சலி, இயேசு காவியம் எனப் பல நூல்களை எழுதியுள்ளார். புதினம் எழுதுவதிலும் வல்லவர். இவர் எழுதிய “அர்த்தமுள்ள இந்துமதம்” என்னும் நூல்கள் பெரும் புகழ் பெற்றன. இவர் இயற்றிய “சேரமான் காதலி”க்கு சாகித்திய அகாதெமி பரிசு வழங்கிப் பாராட்டியது.*

**கரிசல் காட்டுக் கழனியில் சில**
**கால்கள் உழுத உழவு - சில**
**கைகள் கனிந்த கனிவு - குடிசை**
**எரிக்கும் விளக்கின் ஒளியைப் போல**
**இலைகள் இரண்டு வரவு - அதில்**
**இயற்கை கலந்த அழகு!**

**பருத்தி என்றொரு செடி வளர்ந்தது**
**பருவப் பெண்ணைப் போலே - அந்தக்**
**கரிசல் கழனி மேலே - அது**
**சிரித்த அழகில் காய் வெடித்தது**
**சின்னக் குழந்தை போலே - அந்த**
**வண்ணச் செடியின் மேலே!**

**பருத்தி யெடுத்துக் கொட்டை பிரித்ததும்**
**பஞ்சுக் குவிய லாச்சு - ‘மில்’லைப்**
**பார்க்கப் பயணம் போச்சு - அதைத்**
**திருத்தி யெடுத்துப் பார்க்கும் போது**

சின்ன இழைக ளாச்சு - நூல்
என்னும் பெயர்உண் டாச்சு!

அழகு வண்ணம் கலந்து நெய்ததில்
ஆடை வந்தது மெல்ல - பலர்
மானம் காத்துக் கொள்ள - இடை
குழையும் மாதர் உடலி லேறிக்
கோலக் கவிதை சொல்ல - உடல்
மூடி அணைத்துக் கொள்ள!

அந்தத் துணியில் ஒன்று கிழிந்து
அடுப்பங் கரைக்கு வந்து - தான்
படிக்கு திந்தச் சிந்து - தன்
சொந்தக்காரர் பலரை எண்ணித்
துடிக்குது மனம் வெந்து - கதை
சொல்லுது தன்னை நொந்து!

வாழும் நாளில் வாழ்ந்த என்னை
வைத்த இரும்புப் பெட்டி - இன்று
உதைக்கும் என்னை எட்டி - நிலை
தாழ்ந்தபோது மனிதர் கூட
உடைந்த பானை சட்டி - யார்
உறவு கொள்வார் ஒட்டி?

என்னை ஒருத்தி இடையி லேற்றி
இருந்த காலம் உண்டு - அவள்
மணந்த கணவன் கண்டு - அவள்
கன்னத்தோடு என்னைச் சேர்த்து
கலந்த காலம் உண்டு - அது
இறந்த காலம் இன்று!

சலவை செய்து வாசம் போட்டுத்
தங்கம் போல எடுத்து - பின்
அங்கம் பொலிய உடுத்து - தன்
நிலைமை மாறிக் கிழிந்த பின்பு
நிலத்தில் என்னை விடுத்து - சென்றார்
நீண்ட கதை முடித்து!

சுட்ட சோற்றுப் பானை சட்டி
தூக்கி இறக்க வந்தேன் - என்
தூய உடலைத் தந்தேன் - நிலை

கெட்டுப் போன செல்வர் போலக்
கேள்வி யின்றி நின்றேன் - இன்று
கேலி வாழ்க்கை கண்டேன்!

பந்தல் போட்டு மணம் முடித்த
பருவ உடலில் துள்ளி - வாழ்ந்த
பழைய கதையைச் சொல்லி - ஏங்கும்
கந்தல் கதையைக் கேட்ட பின்பும்
காலம் அறிந்து கொள்வீர்! - வாழ்வைக்
காவல் காத்துக் கொள்வீர்!

மேனி யழகும் காசு பணமும்
இருக்கும் வரைக்கும் லாபம் - அதை
இழந்து விட்டால் பாபம்! - பின்
ஞானி போலப் பாட வேண்டும்
நாய்க ளுக்கும் கோபம் - அதுதான்
நான் படிக்கும் சோகம்!

கந்த லுக்கும் வாழ்வு வரும்
காலம் ஒன்று உண்டு - ஒரு
கையளவு துண்டு - மேனிப்
பந்தல் தன்னை மூடிக் கொள்ள
வேண்டும் வேண்டும் என்று - ஏழை
வேண்டி நிற்பான் அன்று!

கோவ ணமாய் ஆன போதும்
கொள்கை எனக் குண்டு - மானக்
கோட்டை காப்ப தென்று - இன்று
கேவலமாய் ஆன போதும்
கேள்விக்குறி ஒன்று! - பதில்
கேட்கிறது நின்று!

# 4. வருங்கால மனிதன் வருக!

**- தமிழ் ஒளி**

*இவரது இயற்பெயர் விஜயரங்கம். 21 09 1924இல் சின்னையா. செங்கேணி அம்மாள் என்னும் இணையருக்குப் புதுவையில் பிறந்தவர். பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள் இலக்கியத்திறனாய்வுகள் மேடை நாடகங்கள். குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். திராவிடர் கழகத் தொண்டராக இருந்து பிற்காலத்தில் பொதுவுடைமைக் கொள்கைகளை உயிர்மூச்சாகக் கொண்டு வளர்ந்தவர். இங்கு அவரது வருங்கால மனிதனை வரவேற்கும் விதமாக அமைகிறது இவரது கவிதை.*

புத்தர் நடந்த திசையிலே - அருள்
பொங்கி வழிந்த திசையிலே
சித்தம் மகிழ்ந்து நடந்திட - ஒரு
தெய்வ மனிதன் வருகிறான்!

விண்ணிற் பிறந்தவன் என்றிட - முகம்
விண்சுட ராகப் பொலிவுற
மண்ணிற் பிறந்த மனிதருள் - புது
மைந்தன் பிறந்து வருகிறான்!

மன்னன் அசோகனும் காந்தியும் - திரு
வள்ளுவன் என்றவே தாந்தியும்
சொன்ன படிக்கு நடந்திடப் - பரி
சுத்த மனிதன் வருகிறான்!

சொல்லும் செயலும் ஒருதொழில் - எனும்
தொன்மை நெறியைத் தொடர்ந்திடக்
கல்லும் உருகும் கருணையை - இரு
கண்ணெனக் கொண்டு நடந்திட

நல்ல மனிதன் வருகிறான் - தமிழ்
நாட்டு மனிதன் வருகிறான்!
வல்லமை கொண்டு வளர்ந்திடப் - புவி
வாழ்ந்திடச் செய்ய வருகிறான்!

‘மண்மிசை அன்பை விதைத்திடில் - அது
மாமர மாகிக் கனிதரும்!
உண்ண மரணம் ஒழிந்திடும்’ - என
ஓதும் மனிதன் வருகிறான்!

பள்ளமும் மேடும் குறுக்கிடில் - இசை
பாடி நடந்து கடப்பவன்!
கள்ளமும் வஞ்சமும் கண்டிடில் - இரு
கால்களில் எட்டிப் புடைப்பவன்!

நற்கலை கற்றுத் தெளிபவன் - தமிழ்
நாட்டை உயர்த்தும் மனிதனாம்!
பொற்சுட ராகப் பொலிவுற - இந்தப்
புண்ணிய மைந்தன் வருகிறான்!

## 5. ஓடு... ஓடு... சங்கிலி

**- சிற்பி**

*ஆத்துப் பொள்ளாச்சியில் பொன்னுச்சாமி-சண்டியம்மாள் ஆகியோரின் புதல்வராக 29-07-1936இல் பிறந்தார். பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.*

*இவரின் முதல் கவிதை நிலவுப்பூ 1956இல் வெளிவந்தது. வானம்பாடிக் கவிதை இயக்க முன்னோடி. இவரது கவிதை நூல்களுள் குறிப்பிடத்தக்கவை: சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்பயாகம் புன்னகை பூக்கும் பூனைகள், மௌன மயக்கங்கள், சூரிய நிழல், கண்ணாடிச் சிறகுள்ள ஒரு பறவை. உரைநூல்கள், மொழி பெயர்ப்புகள், வரலாற்று நூல்கள் எனப் பல்வேறு படைப்புகளை வெளியிட்டுள்ளார்.*

*இவரது 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதைத்தொகுப்பு 2002இல் சாகித்ய அகாதெமிப் பரிசு பெற்றது. இத்தொகுப்பில் உள்ள "ஓடு...ஓடு...சங்கிலி" என்னும் கவிதை பாடமாக இடம்பெறுகின்றது. அம்மாவின் நினைவுகள் சோர்ந்து போகும் போதெல்லாம் தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டுவதைக் குறிப்பிடுகிறது இக்கவிதை.*

அழித்து எழுதமுடியாத
சித்திரம் ஒன்றுண்டு
அம்மா

எப்போதும் பெண்களெனில்
இளக்காரம் ஆண்களுக்கு
    "காயம் பட்டாக்கூட
    ரத்தம் வர்ரதில்லே
    டாக்டர்கிட்ட அவளெக்
    காட்டுங்கடா..."

அம்மாவைப் பற்றி
அங்கலாய்த்த அப்பா
காணாது போன
பேரன் திருமணமும்
கொள்ளுப்பேத்தி வரவும்

பிடிவாதமாய்ப் பார்த்துப்
போனவள் அம்மா

தாமிர முகம்
கொங்குக் கொண்டை
வெற்றிலைக் கறைபடிந்த
‘எந்து பல்’
சிவப்பு மேனி மறைக்கும்
பின் கொசுவக்
கைத்தறிச் சேலையும்
‘அங்கிங்கெனாதபடி’
குத்திவைத்த பச்சையும்

பட்டுப் புடவையில்
அம்மாவைப் பார்த்ததே இல்லை
அப்பா எடுத்துக் கொடுக்க
இல்லையோ என்னவோ

நேசிப்புக்கு எடுத்த ஜென்மம்
கறி தின்னும் அப்பாவுக்குக்
கை கூசாமல் சமைத்தளிக்கும்
கடும் சைவக்காரி.

நேசிப்பு... நேசிப்பு
புருசனைப் போலவே
பண்ணையத்தையும்
குழந்தைகள் போலவே
எருமைகளையும்!
உறவுகளைப் போலவே
அக்கம் பக்கத்தையும்

ஓலைக்குடிசை -
மாளிகை பேதங்கள்
கைப் பக்குவத்தைக்
கடுகளவும் மாற்றவில்லை
கூட்டுச் சாற்றிலும்
வெறும் மிளகு ரசத்திலும்
அதே சுவை... அதே... மணம்
மேதினியில் அதுபோல
ஏது இனி?

ஊரையே தூக்கும்
அப்பாவின் கோபத்தை
ஒற்றைப் பார்வையால்
செதுக்கி ஊமையாக்குவாள்

எழுபது வயதிலும்
மூத்தவரைக் கண்டால்
தலைகுனிந்து நிலம் கீறும்
அம்மா ஓர் அதிசயம்
மட்டும் மரியாதையும்
கொட்டிய களஞ்சியம்

ஒற்றையடிப் பாதையில்
நடக்கச் சலித்த குழந்தையை
முன்னால் நடத்தி
“ஓடு ஓடு சங்கிலி
ஓடோடு...
காலை மிதிப்பேன்
கையை மிதிப்பேன்
ஓடு ஓடு சங்கிலி
ஓடு ஓடு...”
என்று பாடித் துரத்துவாள்.
அம்மா.

சோர்வு சூழும்பொழுது
இன்றும் அம்மாவின் குரல்:
“ஓடு ஓடு சங்கிலி
ஓடோடு...”

# 6. இது வித்தியாசமான தாலாட்டு

**- வைரமுத்து**

*தேனி மாவட்டம், வடுகப்பட்டியில் ராமசாமித்தேவர் - அங்கம்மாள் ஆகியோருக்கு 13-07-1953இல் மகனாகப் பிறந்தவர். தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் மட்டுமல்லாது திரைப்படத் துறையிலும் தமக்கென ஒரு தனிமுத்திரையைப் பதித்தவர். வைகறை மேகங்கள், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசியகீதம், எனது பழைய பனையோலைகள், பெய்யெனப் பெய்யும் மழை, கொடி மரத்தின் வேர்கள் போன்ற இவரது கவிதைத் தொகுப்புகள் குறிப்பிடத்தக்கவை.*

*தன் வரலாறு, கட்டுரைகள், நாவல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்குபவர். கலைமாமணி, சாகித்ய அகாதமி விருது, பத்ம பூசன் விருது, சிறந்த பாடலாசிரியருக்கான தேசியவிருது என ஏராளமான விருதுகளுக்குச் சொந்தக்காரர்.*

*இவரது 'இது வித்தியாசமான தாலாட்டு' கவிதை இங்கு இடம்பெறுகிறது. சமூக அவலங்களையெல்லாம் எவ்வாறு கடந்து, களைந்து வாழவேண்டும் என்பதை இக்கவிதை சுட்டுகிறது.*

மகனே
வழக்கமான தாலாட்டை
உனக்கு நான்
வாசிக்க முடியாது

அவை
மொழியின் ஆடம்பரங்கள்
கைது செய்து வைத்த
கனாக்கள்

நிர்ப்பந்த உறக்கத்திற்கு
உன்னை
இட்டுச் செல்லும் ஏற்பாடுகள்

என் தாலாட்டு
இசை என்னும்
தூக்க மாத்திரைகள் இல்லாதது

இது
உறக்கத்தையல்ல
உன் விழிப்பையே பாடுபொருளாய்க் கொண்டது

தந்தை மகற்காற்றும்
சம்பிரதாயச் சடங்குகளின்
நீட்டோலையை என்னிடம் நீ
நீட்டாதே.

சுவாசிக்கத் தெரிந்த உனக்குக்
காற்று மண்டலத்தை
அறிமுகம் செய்வது அவசியமில்லை.

நாங்கள் உனக்குப்
பெயரிட்டது
எங்கள் சௌகர்யம்
கருதித்தான் மகனே

பாஷை
தனது
அர்த்த மண்டபத்திற்கு
உன்னை
அழைத்துச் செல்லும் போது
உன் பெயரை
நீயே இட்டுக் கொள்வதே நீதி.

உன்
தூளியின்மேல் தொங்கவிட
வர்ண பலூன்கள் இல்லையென்று
வருந்தாதே.

உன் தூளிக்குக்
கயிறு கிடைத்ததே என்று களி.

ஆமாம் மகனே
உனக்கு அணிவிக்க
என்னிடம்
ஆபரணங்களில்லை
விலங்குகளுமில்லை

உனக்கு நான்
செல்வம் எதுவும்
சேர்த்து வைக்க முடியாது

நீ
செலவழிப்பதற்கு
உன்
வேர்வை இருக்கிறது

பள்ளிக் கூடத்தில்
உன்னைச்
சேர்ப்பது பற்றி நான்
சிந்திக்கவில்லை

அங்கே
உனக்கு நிகழ்வது
எழுத்துக்களின்
கட்டாய அறிமுகந்தான்

வாழ்க்கையை வாசிக்க
நீ
தெருவுக்குத்தானே
திரும்பி வரவேண்டும்

உன் சாலையில்
மரங்கள்
பூக்களைப் பரப்பிவைக்கலாம்
ஆனால்
மனிதர்கள்
முட்களைப் பரப்பி வைக்கலாம்
நீ

பூவையும் எடுத்துக் கொள்
முள்ளையும் எடுத்துக் கொள்.

அந்தப் பூவைச்
சட்டையில் குத்திக் கொள்ள
முள்ளைக்
குண்டூசியாக்கிக் கொள்

உன்னை நான் வாழ்த்துகிறேன்.
ஆனால்
வாழ்த்துக்களே உன்னை
வாழ வைத்து விடுவதில்லை.

நதிக்கரை ஓரத்து நகரம்
வெள்ளப் பெருக்கை எதிர்பார்த்து
விழிப்போடிருப்பது போல்
எப்போதும் விழிப்பாய் இரு.

உறங்கும்போதும் உன் மனக்கண்கள்
இமைத்துக் கொண்டே இருக்கட்டும்
இந்தச் சமூகத்தின் வேர்களை
கொஞ்சம் விசாரி.

அஸ்திவாரங்களின் அறிமுகம் இல்லாமல்
சுவர்களை இரசிக்காதே
மானுடத்தை உன் தோள்களில் ஏற்றி
ஓர் அங்குலமாவது உயர்த்து...
திசைகளின் நெற்றிகளுக்கு உன்பெயர்
பொட்டாகட்டும்!

# 7. காலம் பிரசவித்த மற்றொரு காலம்

**- பச்சியப்பன்**

*திருவண்ணாமலை மாவட்டம். பெரிய அய்யம்பாளையம் என்ற கிராமத்தில் ராஜவேல்-மணி அம்மாள் ஆகியோருக்கு 25.06.1968இல் பிறந்தவர். சென்னையில் அரசுக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக விளங்குபவர்.*

*உனக்குப்பிறகான நாட்களில், கல்லால மரம், மழை பூத்த முந்தானை, வேட்கையில் எரியும் பெருங்காடு ஆகிய கவிதை நூல்களும், பாரதியின் புதுவை வாழ்க்கை, தும்பிகள் மரணமுறும் காலம், மண்ணில் எங்கும் நீரோட்டம் என்ற கட்டுரை நூல்களும் எழுதியுள்ளார். பல்வேறு தொலைக்காட்சித் தொடர்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளார்.*

*அழிந்து வரும் நம் வேளாண் பண்பாடும் நகரமயமாதலினால் ஏற்படும் தீர்க்கவொண்ணா வலியையும் பதிவு செய்கிறது இக்கவிதை.*

மொட்டை மாடியெங்கும்
குரோட்டன்ஸ் படர்ந்து கிடக்கும்
இதோ
இந்த வீடிருக்கும் இடத்தில்தான்
என் வயல் இருந்தது.

சிமெண்ட் பலகையிட்டு மூடியிருக்கும்
இந்தக் கழிவுநீர்த்தொட்டி
நேற்றுவரை
ஜீவரசம் சுரந்த கிணறு.

உயரச் சுவரெழுப்பி
உச்சிப் பரப்பெங்கும்
கண்ணாடிச் சில்லுகள் பதித்த
சுற்றுச் சுவரோரம்தான்
கிணற்று மேடிருந்தது
மேட்டின் வலதுபுறம் மாமரம்
இடத்தில் அரச மரம்

கனியின் காலங்களில்
பறவைகளின் பாடல்கள்
காது நிறைக்கும்

உன் தொலைக்காட்சிப் பெட்டிகளில்
ஒரு நாளும் கேட்டறியாப் பாடல்கள் அவை

நகரம் விழுங்கிய
தாய்மையின் அணைப்பறியா உனக்கு
மரங்களின் நிழல் பற்றி
உதாரணத்தோடு சொல்ல முடியவில்லை
தொண்டை பிரித்துத் தலையாட்டும்
நெற் பூக்களுடையதும்
கம்பம் பூக்களுடையதுமான
வாசக்கலவை சுமந்து வரும் காற்று
சுழன்று பறக்கும்
உன் மின்விசிறி ரெக்கைகள்
தொடமுடியாத தூரத்திற்குப் போய்விட்டது

துடிப்பு நிறுத்துவதான
கீச்சுக் குரல் கொண்டு குரைக்கும்
முடி செழித்த அல்சேஷனைக்
கட்டி வைத்திருக்கிறாயே
இங்குதான்
என் காலத்தை சுமந்திருந்துபோன
உழவு மாடுகளைக் கட்டி வைத்திருந்தேன்.

இருக்கவும் கூடும்
அல்சேஷனுக்கு வீசப்படும் கறி
அவைகளுடையதாகவும்.

# 8. காடு

**- பழநி பாரதி**

*திரைப்படப் பாடலாசிரியரும், கவிஞரும் ஆன பழநி பாரதி, கவிஞர் சாமி பழனியப்பன், கமலா இணையருக்கு மகனாக காரைக்குடியில் பிறந்தவர். 1500க்கும் மேற்பட்ட திரைப்பாடல்களை எழுதியுள்ளார். 'தை' என்னும் இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக விளங்குபவர்.*

*நெருப்புப் பார்வைகள், வெளிநடப்பு, காதலின் பின்கதவு, மழைப்பெண், புறாக்கள் மறைந்த இரவு, சூரியனுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம் போன்ற இவரது கவிதைத் தொகுப்புகள் குறிப்பிடத்தக்கவை.*

*'புறாக்கள் மறைந்த இரவு' என்னும் கவிதைத்தொகுப்பில் 'காடு' இடம் பெறுகிறது. மனிதன் மகத்தானவன் தானா? என்ற கேள்வியை எழுப்புகிறது இக்கவிதை.*

**கவிதை எழுத**
**காகிதம் எடுத்தேன்**

**உலகெங்கும்**
**காகிதத்திற்காக அழிக்கப்பட்ட**
**காடுகளின் மணம்**
**துளைத்தது என் மூச்சை**

**வார்த்தையாக வந்த**
**மிருகமொன்று**
**இழுத்துச் சென்றது காட்டுக்குள்**

**நானும் ஒரு**
**விலங்காகப் பிறக்க நினைத்து**
**கலந்தாலோசித்தேன்**
**மற்ற விலங்குகளை!**

**போராடத் தெரியுமா என்றது**
**புலி**

**நன்றி மறக்காமல்**
**இருக்கத் தெரியுமா என்றது**
**நாய்**

தன்மானத்தோடு
வாழத்தெரியுமா என்றது
கவரிமான்

அடுத்தவர் அழுக்கை உன் முதுகில்
சுமக்க முடியுமா என்றது
கழுதை

பாலைவனங்களைக்
கடக்க முடியுமா என்றது
ஒட்டகம்

பந்தயங்களில்
ஜெயிக்க முடியுமா என்றது
குதிரை

வைக்கோல் கன்றுக்கும் உன்னால்
பால் சுரக்க முடியுமா என்றது
பசு

ஆசீர்வதிக்கத் தெரியுமா என்றது
யானை

இருட்டிலும்
பார்க்கத் தெரியுமா என்றது
பூனை

ஆண்பெண்
வேற்றுமை பார்க்காமல்
குழந்தைகளை
வளர்க்கத் தெரியுமா என்றது
கடைசியாக
கங்காரு

நான் முடிவு செய்துவிட்டேன்
அஃறிணைகளெல்லாம்
உயர்திணைகளாகிவிட்ட பிறகு
விலங்காக வேண்டுமெனில்
விலங்காகத் தான் வேண்டுமெனில்
மனிதனாகத்தான்
பிறக்க வேண்டும்

# 9. இயற்கைக்குத் திரும்புவோம்

**- தேவயானி**

*கவிஞர் தேவயானி அவர்கள் 05.05.1955-ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள அனுராதபுரம் எனும் ஊரில் தாசிரி வேளார், கருப்பாத்தாள் ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தெய்வானை. பள்ளிக் கல்வியை இலங்கையிலுள்ள விவேகானந்தா தமிழ் மகா வித்யாலயத்தில் பயின்றார். முதுகலை வகுப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார். தற்போது திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் எனும் ஊரில் வசித்து வருகிறார். படிக்கும் காலத்திலேயே பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகள் பெற்றவர். பள்ளிப் பருவத்தில் அகில இலங்கை இந்து மகா சபை நடத்திய போட்டித் தேர்வில் பங்கேற்று மூன்றாம் பரிசு பெற்றுத் தாம் படிக்கும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர். தீக்கதிர், குங்குமம் ஆகிய இதழ்களில் பல்வேறு கவிதைகளை வெளியிட்டுள்ளார். தற்போது இவர் அஞ்சல் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். இவர் எழுதிய உயிருக்குள் தாகம் எனும் கவிதை நூல் உடுமலைப்பேட்டை அரசுக் கல்லூரி முதுகலை மாணவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சிறப்பிற்குரியது. இவருடைய உயிருக்குள் தாகம் எனும் நூலில் உள்ள இயற்கைக்குத் திரும்புவோம் எனும் கவிதை இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.*

**விஞ்ஞானிகளே**
**விடை கூறுங்கள்.**

**உலகை வென்றுவிட்டதாய்**
**உவகை கொள்ளாதீர்!**

**சாபக்கறகளில்தான்**
**சந்தனம் அரைத்துப்**
**பூசிக் கொள்கிறீர்...**

**என்னைத் தட்டி எழுப்பும்**
**சூரிய கிரணத்தில் புற்று நோய்**

**என் மீது தவழும்**
**சந்திர ஒளியில் சர்க்கரை வியாதி!**

இங்கு
சுவாசப் பைகள் சுமப்பது
கரியமில வாயுவைத்தான்.

அமுதம் பொழிந்த
ஆகாயத்தை
அமிலம் சொரிய வைத்தீர்!

கவிதை பாடிய
காற்றை தண்டித்து
கறுப்பு முக்காடிட்டீர்!

பூமிப் பெண்ணின்
ஓசோன் திரையை
ஓட்டை போட்டீர்!

கல்லுக்குள் மறைந்திருந்த தீயை
இரும்புக்குள் புகுத்தி
நெஞ்சுக்குள் நெருப்பு மூட்டினீர்!

நஞ்சை வயல்களுக்கு
உரம் கொடுப்பதாய்
நஞ்சைக் கலந்தீர்!

பருகும் பானங்களில்
எலும்புகள் உருகும்
இரசாயனம் சேர்த்தீர்...

என்
தாய்ப்பால் கசந்துபோனது

இப்போது
நோயை விட மருந்துதான்
மனிதனை அதிகம் கொல்கிறது.

மரங்களுக்கு பதில்
மருத்துவமனைகள்தான்
உயரமாக வளர்கின்றன...

நான்கடி நடப்பதற்குள்
நாக்கு காய்கிறது...
கால்கள் தேய்கிறது...

அன்று
இளவட்டக் கல் தூக்கி
பலம் காட்டிய இளைஞர்களை
எண்ணிப் பார்க்கிறேன்
அன்றைய அந்த
இயற்கை உணவுக்காக ஏங்குகிறேன்...

# 10. இலக்கியத்தில் பெண்கள்

**- செல்வகுமாரி**

*கவிஞர் ஜெ.செல்வகுமாரி புதுவைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தற்போது, புதுவையில் தமிழாசிரியையாகப் பணியாற்றி வருகிறார். சமூக உணர்வுடன் சமூகப் பணிகள் பல செய்து வருபவர். மார்க்சியம் மற்றும் முற்போக்குச் சிந்தனை உடையவர். படிக்கும் காலத்திலிருந்தே பெண்களின் சிந்தனையில் அதிகம் ஈடுபாடு உள்ளவர். மதுரையில் நடைபெற்ற மாணவர்கள் மாநாட்டில் முதல் பத்து சிறந்த கவிஞர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பெண்களுக்கான விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருபவர். இவரது 'பெண்ணியம் பேசுகிறேன்' என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து இலக்கியத்தில் பெண்கள் இக்கவிதை இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.*

பெண்மைக்கு மென்மை பூசி
பேரிலக்கியம் படைத்திட்டார்.
பெண்மையை இரணமாக்கி
புராணங்கள் படைத்திட்டார்
பெண்மையைப் பேயென்றும்
இதிகாசங்கள் படைத்திட்டார்.

சங்க இலக்கியங்களிலும்
தங்கக் காப்பியங்களிலும்
பெண்கள் பேசப்படும்
விதமே தனிதான்.

ஐந்திணைகள் பிரித்தனர்
அகப்பொருள் கண்டனர்
முதற்பொருள் கருப்பொருள்
உரிப்பொருள் என்று
அகத்திலே முப்பொருள் கண்டனர்.

முதற்பொருளைக்
குறிஞ்சியென்றும்
முல்லையென்றும்
மருதமென்றும்
நெய்தலென்றும்
நானிலமாய் ஆக்கினார்.

இந்நான்கு நிலத்திற்கும்
அந்நான்கு தெய்வங்களாய்
ஆண்மக்களே உருப்பெற்றனர்
குறிஞ்சிக்கோர் முருகன்
முல்லைக்கோர் திருமால்
மருதத்திற்கோர் இந்திரன்
நெய்தலுக்கோர் வருணன் என்று
நான்கு நிலத்தை ஆண்டனர்.

குறிஞ்சியும், முல்லையும்
திரிந்த “பாலை” ஒன்றுண்டு
நீர் இழந்து
நிறமிழந்து
பசுமையிழந்து, பல இழந்து
கோடை வெப்பத்தால்
கொதித்துப் போன நிலம்
பாலையாம்.

பாலைக்கோர் தெய்வமாய்
கொற்றவையை ஆக்கினார்.
பிணந்தின்னும் பெண்ணாய்
உருவகப்படுத்தினர், அந்தோ!

வளமார்ந்த இடத்திற்குச்
சொந்தமானவர்கள்
ஆண் தெய்வங்கள்.
வளமிழந்த இடத்திற்குச்
சொந்தமானவள்

பெண் தெய்வம்
என்ன பாகுபாடு இது?

அது மட்டுமா...
கருப்பொருள் அடுத்த
உரிப்பொருள் உள்ளே
பெண்ணின் துயரத்தைப்
பெருமையாய்க் கட்டினர்.

பிரிந்த காதலனை எண்ணி
பிரிவாற்றா துயருற்றாள் பெண்.
அது பிரிதல் - பிரிதல் நிமித்தமானது.

பொருள் தேடச் சென்றவனுக்காக
பசலை நோயால் மெலிந்தாள்
அது இருத்தல் - இருத்தல் நிமித்தமானது.

கடலில் சென்றவனுக்காக
கண்விழித்துக் காத்து நின்றாள்.
அது இரங்கல் - இரங்கல் நிமித்தமானது.

இப்படி எத்தனை எத்தனை நிமித்தங்களை
பெண்மகள் சுமந்தாளோ...?

இலக்கியப் பெண்கள் மட்டும்
உயிர்பெற்று வாழ்ந்திருந்தால்
காவியமும், காப்பியமும்
இலக்கியமும், இதிகாசமும்
கதை மாறிப் போயிருக்கும்.

ஆம்...
கண்ணகி விழித்திருந்தால்
கோவலனைச் சுட்டிருப்பாள்.
மாதவி மயங்காதிருந்தால்
மணிமேகலையை மாய்த்திருப்பாள்.
குந்தியவள் நினைத்திருந்தால்
கர்ணனையே கலைத்திருப்பாள்.

சீதையவள் கொதித்தெழுந்தால்
இராமனையே எரித்திருப்பாள்.
சந்திரமதி வெகுண்டிருந்தால்
அரிச்சந்திரனைப் புதைத்திருப்பாள்,
ஆண் வார்த்த இலக்கியங்கள்
ஆணாதிக்க வெளிப்பாடுகளே.
ஆண் வார்த்த காப்பியங்கள்
பெண்ணுக்கிழைத்த கொடுமைகளே.

# 11. ஹைக்கூக் கவிதைகள்

**- அறிவுமதி**

*ஆயிரம் அடிகளில் சொல்வதை அளவாய் மூன்றடிக்குள் சொல்லி முகம் மலர வைக்கும் கவிதைகள் தான் ஹைக்கூ. இது சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம். இது சொற்களால் செதுக்கப்படும் வார்த்தை ஓவியம், எளிமையான மூன்றடி வசீகரம், சின்னச்சின்ன மின் தாக்குதல்கள், சொற்கட்டு, படிம அழகு, ஜப்பானியர் தம் வாமன உயரம் போன்றது; அதே சமயம் அவர்களின் தொழில்நுட்ப மின்னணுத்துறையின் விசுவரூபம் போன்றது. ஜப்பானிய கவிதை வடிவான ஹைக்கூ தமிழில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பிடித்துள்ளது.*

*புகழ் பெற்ற கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான அறிவுமதியின் ஹைக்கூ கவிதைகள் இங்கு இடம் பெறுகின்றன.*

- பள்ளிக்குப் போகாத சிறுமி
  செல்லமாய்க் குட்டும்
  ஆலங்கட்டி மழை

- மரம் வெட்டிய கோடரி
  பார்த்துக் கொள்
  கடைசி மழைத் துளி

- வீட்டிற்குள் குரோட்டன்சுகள்
  தொட்டிக்குள் மீன்கள்
  வானம் தொலைத்த நகரம்

- விடிந்து விடு இரவே
  விழித்திருக்கிறான்
  கூர்க்கா

- நொறுக்குவான் பண்ணையாரை
  எல்லாக் கோபங்களோடும்
  சுடுகாட்டில்

- வாழ்த்து அட்டை
  முகவரியில் வருடினேன்
  எழுதிய உன் கையை

- முதியோர் இல்லம்
  யாரோ பாடிக் கொண்டிருந்தார்
  தாலாட்டு
- அகதி முகாம்
  மழையில் வருகிறது
  மண் வாசனை
- மணவறை
  மெதுவாகப் பெருக்குகிறாள்
  முதிர்கன்னி
- நெருப்பு தான் பெண்
  அம்மாவிற்கு அடிவயிற்றில்
  மாமியார்க்கு அடுப்படியில்

# 12. நாட்டுப்புறப் பாடல்கள்

*நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப் படாதவை, நாவில் பிறந்து செவிகளில் உலவி, காற்றில் மிதந்து, கருத்தில் இனிப்பவை தலைமுறை தலைமுறையாக வளர்ந்து கொண்டிருப்பவை; என்று பிறந்தவை, எவரால் பாடப்பட்டவை என எடுத்துச் சொல்ல இயலாத பண்புடையவை. நாட்டுப்புற மக்கள் எந்த மண்ணில் வாழ்ந்தனரோ, எந்த வேலையைச் செய்தனரோ, எதை மதித்துப் போற்றினரோ அவை எல்லாவற்றையும் கற்பனை நிறைந்த கவிதைகளாகப் பொழிகின்றனர். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டு பழக்கவழக்கங்களை, வரலாற்றை, நாட்டுநடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டுவன நாட்டுப்புறப் பாடல்களேயாம்.*

*நாட்டுப்புறப் பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.*

## 1. தாலாட்டுப் பாடல்

*தாலாட்டு என்ற சொல்லைத் தால்+ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என் நாக்கு; நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு. தாலாட்டுப் பாடல்கள் தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே உள்ளன. தாலாட்டில் தாய்மையின் தவிப்பும், மகிழ்ச்சியும், எதிர்ப்பு ஏக்கங்களும் வெளிப்படுகின்றன.*

ஆராரோ ஆரிராரோ - என் கண்ணே
ஆரிரரோ ஆராரோ
கண்ணே நவமணியே
கானலிலே பிறந்தாயோ
என்னநான் சொல்வேனோ - கண்ணே நீ
இந்திரனோ சொல்லிவிடு

கொட்டிவைத்த முத்தோ! கண்ணே நீ
குவித்துவைத்த ரத்தினமோ!
கட்டிப்பசும் பொன்னே - கண்ணே நீ
கட்டிமுத்தம் கொடுப்பாயே!

சிரியம்மா சிரிச்சிரு - கண்ணே நீ
சித்திரப்பூந் தொட்டிலிலே!
கரும்பு ரசமே - கண்ணே நீ
கசக்காத கற்கண்டே!

மாத்துயர்ந்த பொன்னே - கண்ணே நீ
மண்டலத்து ராசாவோ?
பூத்த புதுப்பூவே - கண்ணே உன்
பொக்கிசத்தைப் பார்த்தாயோ?

மானே மரிக்கொழுந்தே - கண்ணே நீ
மலர்விரிந்த மல்லிகைப் பூ!
காட்டுக் குயிலே - கண்ணே நீ
கண்டெடுத்த பாட்டுக்குயில்!

ஆலம் பூப்போல - கண்ணே நீ
அத்திமரப் பூப்போல
தேம்பி அழுகாதே - கண்ணே நீ
திட்டாதே வையாதே!

வாடாத பூவோ? - கண்ணே நீ
வானகத்துத் தாராவோ?
தேடாத திரவியமோ? - கண்ணே நீ
தெவிட்டாத தெளிதேனோ?

கோட்டை அதிகாரி - கண்ணே உன்
கொடிபறக்கு தாகாசம்
கேட்டதெல்லாம் நான் தருவேன் - கண்ணே
கேவி அழுகாதேடா!

ஆராரோ ஆரிராரோ - என் கண்ணே
ஆரிரரோ ஆராரோ!

## 2. தொழிற்பாடல்கள்

*தொழிற்பாடல்கள் என்பது நாட்டார் பாடல்களில் ஒன்றாகும். பொதுவாக தொழில் புரியும்போது, அதன் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமலிருக்க இதனைப் பாடுகின்றனர். தொழிலாளர்களின் இன்ப துன்பங்கள். நெஞ்சக் குமுறல்கள். விருப்பு வெறுப்புகள் இப்பாடல்களின் உள்ளீடாக விளங்குகின்றன, மீனவர் பாடல், கல்லுடைப்போர் பாடும் பாடல் என இரண்டு பாடல்கள் இங்கு இடம்பெறுகின்றன.*

## மீனவர் பாடல்

விடிவெள்ளி நம் விளக்கு - ஐலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஐலசா
அடிக்கும் அலையே நம் தோழன் - ஐலசா
அருமைமேகம் நமது குடை - ஐலசா
பாயும் புயல் நம் ஊஞ்சல் - ஐலசா
பனிமூட்டம் உடல்போர்வை - ஐலசா
காயும் ரவிச்சுடர்கூரை - ஐலசா
கட்டுமரம் வாழும் வீடு - ஐலசா
மின்னல்வலை அரிச்சுவடி - ஐலசா
பிடிக்கும் மீன்கள் நம் பொருட்கள் - ஐலசா
மின்னல் இடிகாணும் கூத்து - ஐலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஐலசா
முழுநிலாதான் கண்ணாடி - ஐலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் - ஐலசா
தொழும் தலைவன் பெருவானம் - ஐலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஐலசா
ஒத்துமை கொண்டாடனும் - ஐலசா
உரிமையை உயர்த்திடனும் - ஐலசா

## கல்லுடைப்போர் பாட்டு

கல்லொடச்சிக் களைப்பாச்சி லேலங்கடி லேலோ
கையிரெண்டும் புண்ணாச்சி லேலங்கடி லேலோ
புல்லறுத்துப் பொழைச்சிருந்தா லேலங்கடி லேலோ
புள்ளகுட்டி வாழ்ந்திருக்கும் லேலங்கடி லேலோ

வேகாத வெய்யிலிலே லேலங்கடி லேலோ
வெந்து நாமும் சாகிறோமே லேலங்கடி லேலோ
காலை முதல் கல்லொடைச்சி லேலங்கடி லேலோ
கால்வயிறு ரொம்பலியே லேலங்கடி லேலோ

ஊருவிட்டு ஊரு வந்து லேலங்கடி லேலோ
ஓயாம ஒழைக்கிறோமே லேலங்கடி லேலோ
ஏரு ஓட்டி பொழச்சிருந்தா லேலங்கடி லேலோ
எப்படியும் வாழ்ந்திருப்போம் லேலங்கடி லேலோ

# செய்யுள் திரட்டு

## இரண்டாம் பருவம் - பகுதி - I, தமிழ் தாள் - II

(2020-2021ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

**பாரதியார் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர்

# செய்யுள் திரட்டு

இரண்டாம் பருவம் - பகுதி - I, தமிழ் தாள் - II

(2020 - 2021ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

(செய்யுள், உரைநடை, இலக்கணம், இலக்கிய வரலாறு, விண்ணப்பம் வரைதல்)

பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

## பொருளடக்கம்

### இரண்டாம் பருவம்


அலகு - I

1. திருக்குறள்

அ. இனியவை கூறல் 45

ஆ. உழவு 46

இ. குறிப்பறிதல் (காமத்துப்பால்) 47

2. நாலடியார் - சுற்றம் தழால் 48

3. நான்மணிக்கடிகை - தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பாடல்கள் 50
(11, 13, 29, 48, 66, 83, 85, 94, 100, 105)

அலகு - II

4. தமிழ்விடு தூது - முதல் 25 கண்ணிகள் 52

5. நாச்சியார் திருமொழி 54
வாரணம் ஆயிரம் எனத் தொடங்கும் 11 பாடல்கள்

6. மாணிக்கவாசகரின் - திருவம்மானை 57

7. சித்தர் பாடல்கள் 60

8. காளமேகப்புலவர் பாடல்கள் 63

அலகு - III

உரைநடைத் தொகுப்பு

1. கலைகள் 64
- உ.வே.சாமிநாத ஐயர்

2. தமிழர் பண்பாடு - ஒரு விளக்கம் 77
- டாக்டர் சோ.நா.கந்தசாமி

3. திருக்குறள் நெறியில் அறிவாண்மை 81
- **திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

4. இணையத் தமிழ் வளர்ச்சி 87
- முனைவர் **ப. அர. நக்கீரன்**

5. கொங்குநாட்டார் தமிழ்ப்பணி:
காப்பியப் புலவர்கள் 97
- முனைவர் **இரா.கா. மாணிக்கம்**

அலகு - IV

இலக்கணம்

1. வினா விடை வகைகள்
(அறுவகை வினா, எண் வகை விடை)

2. ஆகுபெயர் விளக்கம் - பயன்பாடு வகைகள் 10

அலகு - V

இலக்கிய வரலாறு

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
2. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்

பயிற்சிக்குரியன:

விண்ணப்பங்கள், மடல்கள் எழுதச் செய்தல்

# இரண்டாம் பருவம்

பகுதி - **I,** தமிழ் தாள் **- II**

## வினாத்தாள் அமைப்பு

**காலம்: 3 மணிநேரம்** **மொத்த மதிப்பெண்கள்: 75**

**பகுதி - I தமிழ் - தாள் II**

**பிரிவு - அ** (10 X 1 = 10)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**பிரிவு - ஆ** (5 X 5 = 25)

*செய்யுள் திரட்டு - 2 வினாக்கள்*

*உரைநடை - 2 வினாக்கள்*

*அலகு- IV - 1 வினா*

**பிரிவு - இ** (5 X 8 = 40)

**கட்டுரை வடிவில் விடை எழுதுக**

*செய்யுள் - 2 வினாக்கள்*

*உரைநடை - 1 வினா*

*இலக்கிய வரலாறு - 1 வினா*

*விண்ணப்பங்கள், மடல்கள் - 1 வினா*

***குறிப்பு:*** *ஆ, இ பிரிவுகளில் வினாக்கள் "இது" அல்லது "அது" என்ற வகையில், அந்தந்த அலகுகளிலிருந்து அமைய வேண்டும்.*

# 1. திருக்குறள்

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. பொய்யாமொழி, தமிழ்மறை, முப்பால் என்ற பல பெயர்களைக் கொண்டது. இந்நூல் 133 'அதிகாரங்களையும்', 1330 குறட்பாக்களையும் உடையது. குறள் வெண்பாவால் அமைந்தது. எல்லாப் பொருளும் இதன்பால் உள என்ற சிறப்பைப் பெற்றுள்ள திருக்குறள் எல்லாச் சமயத்தவர்களுக்கும், எல்லாக் காலத்திற்கும் பொருந்துகின்ற கருத்துக்களைக் கொண்டது. பாடப்பகுதியில் மூன்று அதிகாரங்கள் இடம்பெற்றுள்ளன.*

## அ. இனியவை கூறல்
(அறத்துப்பால்)

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

## ஆ. உழவு

(பொருட்பால்)

1. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

5. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை.

7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

10. இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

# இ. குறிப்பறிதல்

(காமத்துப்பால்)

1. இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து

2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

4. யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

6. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

7. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.

8. அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

10. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

# 2. நாலடியார்

*நாலடியார் நானூறு பாடல்களைக் கொண்ட அறநூல். ஒவ்வொரு பாடலும் நான்கடிகளைக் கொண்டது. அறநூல் நாலடி நானூறு என்றும் இதனைக் குறிப்பிடுவர். வாழ்வியல் உண்மைகளைச் சொல்லழகும் பொருளழகும் தோன்ற எடுத்துக் கூறுகின்றது.*

## சுற்றம் தழால்

1. வயாவும், வருத்தமும், ஈன்றக்கால் நோவும்,
கவாஅன் மகற் கண்டு தாய் மறந்தாஅங்கு,
அசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத் தன்
கேளிரைக் காணக் கெடும்

2. அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கு எல்லாம்
நிழல் மரம்போல் நேர் ஒப்பத் தாங்கி, பழு மரம்போல்
பல்லார் பயன் துய்ப்பத், தான் வருந்தி வாழ்வதே
நல் ஆண்மகற்குக் கடன்.

3. அடுக்கல் மலை நாட! தற் சேர்ந்தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர்; அடுத்து அடுத்து
வன் காய் பலபல காய்ப்பினும், இல்லையே,
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

4. உலகு அறியத் தீரக் கலப்பினும், நில்லா,
சில பகல் ஆம், சிற்றினத்தார் கேண்மை; நிலை திரியா-
நிற்கும் பெரியோர் நெறி அடைய நின்றனைத்தால்,
ஒற்கம் இலாளர் தொடர்பு.

5. ‘இன்னர்; இனையர்; எமர்; பிறர்’ என்னும் சொல்
என்னும் இலர் ஆம் இயல்பினால் துன்னித்,
தொலை மக்கள் துன்பம் தீர்ப்பாரே- யார்மாட்டும்
தலைமக்கள் ஆகற்பா லார்.

6. பொற் கலத்துப் பெய்த புலிஉகிர் வான் புழுக்கல்
அக்காரம் பாலோடு அமரார் கைத்து உண்டலின்,
உப்பு இலிப் புற்கை, உயிர்போல் கிளைஞர் மாட்டு
எக்கலத்தானும் இனிது

7. நாள்வாய்ப் பெறினும், தம் நள்ளாதார் இல்லத்து,
வேளாண்மை வெங் கருணை வேம்பு ஆகும்; கேளாய்;
அபராணப் போழ்தின் அடகு இடுவரேனும்,
தமர் ஆயார்மாட்டே இனிது.

8. முட்டிகை போல முனியாது, வைகலும்,
கொட்டி உண்பாரும், குறடுபோல் கைவிடுவர்,
சுட்டுக்கோல் போல, எரியும் புகுவரே,
நட்டார் எனப்படு வார்.

9. நறுமலர்த் தண் கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையும் செய்வது ஒன்று உண்டோ இறும் அளவும்,
இன்புறுவ இன்புற்று எழீஇ, அவரொடு
துன்புறுவ துன்புறாக் கால்?

10. விருப்பு இலார் இல்லத்து வேறு இருந்து உண்ணும்
வெருக்குக் கண் வெங்கருனை வேம்பு ஆம்; விருப்புடைத்
தன் போல்வார் இல்லுள் தயங்கு நீர்த் தண் புற்கை
என்போடு இயைந்த அமிழ்து.

# 3. நான்மணிக்கடிகை

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று நான்மணிக்கடிகை. இந்நூலின் ஆசிரியர் விளம்பிநாகனார். ஒவ்வொரு பாடலும் ஒரு அணிகலன். ஒவ்வொரு அணிகலனிலும் நான்கு இரத்தினங்கள் பதித்து வைத்ததுபோல் நான்கு கருத்துக்கள் இடம்பெறுகின்றன.*

*இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பாடல்கள் பாடப்பகுதியாக இடம்பெறுகின்றன.*

1. நிலத்துக்கு அணி என்ப, நெல்லும் கரும்பும்;
குளத்துக்கு அணி என்ப, தாமரை; பெண்மை
நலத்துக்கு அணி என்ப, நாணம்; தனக்கு அணியாம்
தான் செல்உலகத்து அறம்.

2. கன்றாமை வேண்டும், கடிய; பிறர் செய்த
நன்றியை நன்றாக் கொளல் வேண்டும்; என்றும்
விடல் வேண்டும், தன்கண் வெகுளி; அடல்வேண்டும்,
ஆக்கம் சிதைக்கும் வினை.

3. கோல் நோக்கி வாழும், குடி எல்லாம்; தாய் முலையின்
பால் நோக்கி வாழும், குழவிகள்; வானத்
துளி நோக்கி வாழும், உலகம்; உலகின்
விளி நோக்கி இன்புறூஉம், கூற்று.

4. நாற்றம் உரைக்கும், மலர் உண்மை; கூறிய
மாற்றம் உரைக்கும், வினை நலம்; தூக்கின்,
அகம் பொதிந்த தீமை மனம் உரைக்கும்; முன்னம்
முகம் போல முன் உரைப்பது இல்.

5. திரி அழல் காணின், தொழுப, விறகின்
எரி அழல் காணின், இகழ்ப; ஒரு குடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டு, கற்றான்
இளமை பாராட்டும், உலகு.

6. நலனும் இளமையும் நல்குரவின்கீழ்ச் சாம்;
குலனும் குடிமையும் கல்லாமைக்கீழ்ச் சாம்;
வளம் இல் குளத்தின் கீழ் நெல் சாம்; பரம் அல்லாப்
பண்டத்தின்கீழ்ச் சாம், பகடு.

7. கல்லா ஒருவர்க்குத் தம் வாயில் சொல் கூற்றம்;
மெல் இலை வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்;
அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம்; கூற்றமே,
இல் இருந்து தீங்கு ஒழுகுவாள்.

8. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளம் இலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞர் இல் போழ்தில், சினம் குற்றம்; குற்றம்,
தமர் அல்லார் கையகத்து ஊண்.

9. மாசு படினும், மணி தன் சீர் குன்றாதாம்;
பூசிக் கொளினும், இரும்பின்கண் மாசு ஒட்டும்;
பாசத்துள் இட்டு, விளக்கினும், கீழ் தன்னை
மாசுடைமை காட்டிவிடும்.

10. மனைக்கு விளக்கம் மடவாள்; - மடவாள்
தனக்குத் தகை சால் புதல்வர்; மனக்கு இனிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்,
ஓதின், புகழ் சால் உணர்வு.

# 4. தமிழ்விடு தூது

*தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி ஒருத்தி. தனது காதல் துன்பத்தைத் தலைவனுக்குக் கூறி "மாலை வாங்கி வா" என்றோ தூது சொல்லி வா என்றோ உயர்திணைப் பொருளை அல்லது அஃறிணைப் பொருளை அனுப்புவதே 'தூது' என்னும் சிற்றிலக்கியமாகும்.*

*மதுரையில் குடிகொண்டுள்ள சொக்கநாதர் மீது மிக்க காதல் கொண்ட காரிகை, தன் காதல் நோயை அவரிடம் தக்கபடி உரைத்து வருமாறு தமிழைத் தூது விட்டாள். "தமிழ்விடு தூது" என்னும் சிறந்த இந்நூலை இயற்றியவர் இன்னார் என்பது தெரியவில்லை. இங்கு முதல் 25 கண்ணிகள் பாடப்பகுதியாக அமைகின்றது.*

(கலிவெண்பா)

1. சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்

2. டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே

3. செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்

4. கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்
பாடலறி வித்த படைவேளும் - வீடகலா

5. மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்
அன்னைமுலைப் பாலி னறிந்தோறும் - முன்னரே

6. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்

7. தேடிமுடி யாவடி யைத் தேடாதே நல்லூரிற்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

8. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்
பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

9. ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்
தொல்காப் பியமொழிந்த தொன்மொழியும் - மல்காச்சொற்

10. பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு
சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்

11. தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்
ஆதி முனிவ ரனைவோருஞ் - சாதியுறும்

12. தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழிற்

13. பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

14. காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்
பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாவருங்

15. கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்

16. என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென்

17. பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக் கேறா வியற்கலையே - விஞ்சு நிறந்

18. தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்
தீயாது சொல்வினையுஞ் செய்யுளே - வீயா

19. தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

20. புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காங்க கருப்பமாய் - நண்ணித்

21. தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்
உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி

22. ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே

23. எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணியோற்

24. பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு

25. மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்-மஞ்சரையே

# 5. நாச்சியார் திருமொழி

*இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்; கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருவில்லிபுத்தூரில், நந்தவனத்தில் திருத்துழாய்ச் செடிநிழலில் பெரியாழ்வார் கண்டெடுத்த திருக்குழந்தை இவர். கோதை என்று பெயர் சூட்டியதோடு, இவளே என்னை ஆண்டாள் எனக்கருதிய பெரியாழ்வார் இவருக்கு 'ஆண்டாள்' என்றே பெயரிட்டுவிட்டார்.*

*திருமாலுக்குக் கட்டப்பட்ட பூமாலையைச் சிறுமி ஆண்டாள் முதலில் தான் சூடிவிட்டுப் பின் இறைவனுக்குச் சூட்டியதால் 'சூடிக்கொடுத்த நாச்சியார்', 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' எனப் போற்றப்படுகிறார்.*

*ஆண்டாள், தமக்குக் கண்ணனே ஏற்ற கடவுள் என்ற மனநிலை கொண்டு பாடினார்.*

*இவரது 'நாச்சியார் திருமொழி' 143 பாசுரங்கள், 'திருப்பாவை'ப் பாடல்கள் 30 என 173 பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைச் சுவையூட்டுகின்றன.*

*இங்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ள 11 பாசுரங்களும் நாச்சியார் திருமொழியின் ஆறாம் திருமொழியாக அமைந்துள்ளன.*

மாயவன் தன்னை மணம் செய்யக் கண்ட தூயநற் கனவைத்
தோழிக்கு உரைத்தல்
கலிவிருத்தம்

கல்யாணி ராகம் ரூபக தாளம்

வாரணம் ஆயிரம் சூழவ லம்செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்ப்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான். 1

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்க்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான். 2

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி! நான். 3

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்திப்
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன் தோழி! நான் 4

கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்
சதிரிள மங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழி! நான் 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி! நான். 6

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப்பரிதி வைத்துக்
காய்சின மாகளிறு அன்னான் என் கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக் கண்டேன் தோழி! நான். 7

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயண ன்நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான் 8

வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னைமுன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கைவைத்துப்
பொரிமுகந்து அட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான். 9

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மணநீர்
அங்கஅவ னோடு உடன் சென்றங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். 10

ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை
வேயர்புகழ் வில்லிப்புத்தூர்க்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே. 11

## அருஞ்சொற் பொருள்

*1. வாரணம் - யானை*

*2. வதுவை - திருமணம்*

*3. கமுகு - பாக்கு*

*4. சிட்டர்கள் - சீடர்கள்*

*6. தாமம் - மாலை*

*7. அட்ட - இட*

# 6. மாணிக்கவாசகரின் திருவம்மானை

*பாண்டி நாட்டுத் திருவாதவூரில், ஆதிசைவ மரபில் சம்பு பாதசாரியார் - சிவஞானவதியாருக்குப் புதல்வராகப் பிறந்தார். பிறந்த ஊரின் காரணப்பெயராக இவரை வாதவூரர், வாதவூரடிகள் என்றும் கூறுவர்.*

*இவரது அறிவுக் கூர்மையை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் இவருக்குத் 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டம் வழங்கியதோடு தமது முதலமைச்சராகவும் ஆக்கிக் கொண்டான்.*

*மாணிக்கவாசகர் 32 ஆண்டுகளே வாழ்ந்தார் என்பர். இவர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக உள்ளன. திருவாசகத்தைத் தமிழ் வேதம், சைவ வேதம் எனப் புகழ்வர். இதன் பக்திச் சுவைக்கு உருகாதார் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, பிறமதத்தினரைக் கிறித்தவத்துக்கு மாற்ற முயன்ற ஜி.யு.போப்பின் மனத்தையே மாற்றி இதனை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வைத்தது.*

*அப்பர் தமது திருவாரூர்ப் பதிகத்தில் "நரியைக் குதிரை செய்வானும்" என்று மாணிக்கவாசகர் வாழ்க்கை நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதால், கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. திருவாசகத்தில் (திருவெம்பாவை - 7) காரைக்காலம்மையார் பற்றிய குறிப்பு உள்ளது. காரைக்காலம்மையார் காலத்தைக் கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டு என்பர். மாணிக்கவாசகர் காலத்துப் பாண்டியனுக்குப் பின் பத்துப் பாண்டிய மன்னர்கள் ஆண்ட பின்பே சம்பந்தர் காலத்துக் கூன்பாண்டியன் ஆண்டதாகப் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. எனவே, மாணிக்கவாசகர் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு எனக் கருத இடமளிக்கிறது.*

*இங்குப் பாடப் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் திருவாசகத்தின் திருவம்மானைப் பகுதியில் இடம் பெற்றவையாகும்.*

*அம்மானை என்பது மகளிர் கூட்டமாகச் சேர்ந்து விளையாடும் ஒரு காய் விளையாட்டாகும். ஒரே சமயத்தில் பல காய்கள் காற்றில் வீசப்படும்; சில கீழிறங்கிக் கொண்டிருக்கும்; சில மேலேறிக் கொண்டிருக்கும். காய்கள் நிலத்தில் விழாதவாறு மகளிர் ஓடியாடிப்*

*பிடித்து வீசுவர். இவ்விளையாட்டினை விளையாடும் மகளிர் சிவபெருமானின் புகழைப் பாடிக்கொண்டு காய் வீசும் பாங்கினில் 'திருவம்மானை' அமைந்துள்ளது.*

ஆனந்தக் களிப்பு

திருவண்ணாமலையில் அருளியது

தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

1. செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

2. வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்(டு)
ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

3. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

4. கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைக்காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.

5. பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்

**விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்**
**கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை**
**மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.**

**திருச்சிற்றம்பலம்.**

அருஞ்சொற் பொருள்

| | | | |
|---|---|---|---|
| *1.* | *இடந்தும்* | - | *நிலத்தைப் பிளந்தும்* |
| | *பொங்கு* | - | *விளங்குகிற* |
| | *தென்னன்=தென் நன்* | - | *அழகும் நன்மையும் வாய்ந்த* |
| *2.* | *தலையளித்திட்டு* | - | *பேரருள் செய்து* |
| | *வான்வந்த* | - | *பெருமை தங்கிய* |
| *3.* | *பிச்சு* | - | *பித்து* |
| | *மன்னும்* | - | *நிலைபெற்றிருக்கும்* |
| | *ஒல்லை* | - | *விரைந்து செல்லும்* |
| *4.* | *கிறி* | - | *மாயம்* |
| | *மேலைவீடு* | - | *துறக்கம்* |
| *5.* | *வியன் மண்டலத்து* | - | *பரந்த பரபஞ்சத்து* |
| | *கலி மதுரை* | - | *புகர் மதுரை* |
| | *மொத்துண்டு* | - | *அடியுண்டு* |

# 7. சித்தர் பாடல்கள்

*மிகப்பெரிய தத்துவங்களை எளிய தமிழ்நடையில் கூறுவதே சித்தர் பாடல்களின் தனிச்சிறப்பு. சித்தர் பெருமக்கள் தங்களின் தவத்தால், சிந்தனைத் திறத்தால். சீலத்தால் பெற்ற ஞானத்தேனைப் பாடல்களில் தேக்கித் தந்துள்ளனர்.*

*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் இச்சித்தர் பாடல்கள், நாடு, மொழி, இனம் ஆகிய எல்லைகளைக் கடந்து, அகிலமெங்கும் பரவும் ஆற்றல் பெற்றவை. பாம்பாட்டிச் சித்தர், பட்டினத்தார், சிவவாக்கியர் பாடல்களுள் சில பாடப்பகுதியாக அமைகின்றன.*

1. பாம்பாட்டி சித்தர்

நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நமன்வரும் பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன் பதங் குறித்து நின்று ஆடுபாம்பே! 1

யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன் வரும்போது துணையாமோ அறிவாய்
ஞானஞ்சற்றும் இல்லாத நாய்கட் குப்புத்தி
நாடிவரும்படி நீ நின்று ஆடுபாம்பே! 2

நீரில்எழும் நீர்க்குமிழி நிலை கெடல்போல
நில்லாது உடல் நீங்கிவிடும் நிச்சயம் என்றே
பாரிற் பல உயிர்களைப் படைத்த வன்தனைப்
பற்றவேநீ பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே! 3

நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினும் அதன் நாற்றம் போமோ?
கூறும் உடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்காதென்று ஆடுபாம்பே! 4

காடுமலை நதிபதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காண லாகுமோ?
வீடுபெறும் வழிநிலை மேவிக் கொள்ளவே
வேதாந்தத் துறையில் நின்று ஆடு பாம்பே! 5

## 2. பட்டினத்தடியார்

ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு; உயர்செல்வ மெல்லாம்,
அன்றென்றிரு! பசித்தோர் முகம்பார்! நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு! நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு! மனமே உனக்கே உபதேசம் இதே. 1

நாட்டமென்றே இரு சற்குரு பாதத்தை நம்பு! பொம்மல்
ஆட்டமென்றே இரு; பொல்லா உடலை அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றே இரு; சுற்றத்தை வாழ்வைக்குடங்கவிழ்நீர்
ஓட்டமென்றே இரு; நெஞ்சே உனக்கு உபதேசம் இதே 2

பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவ தில்லை; இடைநடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன்? கச்சிஏகம்பனே! 3

இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே!
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே! - பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப! நாய்நரிகள், பேய் கழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான். 4

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே, விழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே, விம்மிவிம்மி இரு
கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்தரும் சுடுகாடுமட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே. 5

## 3. சிவவாக்கியார்

### சரியை விலக்கல்

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே. 1

### அறிவு நிலை

மாறுபட்டு மணிதுலக்கி வண்டின் எச்சில் கொண்டுபோய்
ஊருபட்ட கல்லின் மீதே ஊற்றுகின்ற மூடரே,
மாறுபட்ட தேவரும் அறிந்துநோக்கும் என்னையும்
கூறுபட்டுத் தீர்க்கவோ குருக்கள்பாதம் வைத்ததே. 2

கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே!
கோயிலும்மனத்துளே குளங்களும் மனத்துளே!
ஆவதும் அழிவதும் இல்லைஇல்லை இல்லையே. 3

கிரியை

சாதியாவது ஏதடா? சலம்திரண்ட நீரெலோ
பூதவாசல் ஒன்றலோ, பூதம்ஐந்தும் ஒன்றலோ?
காதில்வாளி, காரை, கம்பி, பாடகம்பொன் ஒன்றலோ?
சாதிபேதம் ஓதுகின்ற தன்மைஎன்ன தன்மையோ? 4

அறிவு நிலை

கறந்தபால் முலைப்புகா, கடைந்தவெண்ணெய் மோர்புகா;
உடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடற்புகா;
விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டுபோய் மரம்புகா;
இறந்தவர் பிறப்பதில்லை இல்லைஇல்லை இல்லையே. 5

# 8. காளமேகப் புலவர் பாடல்கள்

*இவரது இயற்பெயர் வரதன். மேகம் மழை பொழிவதைப் போன்று இயல்பாக விரைந்து கவிபாட வல்லவர். சிலேடையாகவும் நகைச்சுவையாகவும் பாடும் திறம் மிக்கவர். காலம் 15ஆம் நூற்றாண்டு. திருவானைக்கா உலா, பரப்பிரம்ம விளக்கம் சமுத்திர விலாசம். சித்திர மடல் போன்ற சிற்றிலக்கியங்களையும் 220 தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.*

பாம்புக்கும், எலுமிச்சம் பழத்துக்கும்

1. பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும் - எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பு மெலு மிச்சம்பழம்.

நாய்க்குந் தேங்காய்க்கும்

2. ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாகு - சேடியே
தீங்காய தில்லாத் திருமலைராயன் வரையில்
தேங்காயு நாயுமெனச் செப்பு.

குதிரைக்கும் காவிரியாற்றுக்கும்

3. ஓடுஞ் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் - நாடறியத்
தேடு புகழான் றிருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

# உரைநடைத் தொகுப்பு

## 1. கலைகள்

**- உ.வே.சாமிநாத ஐயர்**

*கலைகளுக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியைக் கலைமகளென்று வழங்குகிறோம்.*

"ஆய கலை களறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்கு வாரா திடர்"

*என்ற செய்யுளால் கலைகள் அறுபத்து நான்கென்பதனையும் அவற்றைக் கலைமகள் அருளிச் செய்வளென்பதையும் அறியலாம்.*

"எண்ணெண் கலையு மிசைந்துடன் போக
எண்ணான் கிரட்டி யிருங்கலை" (சிலப்பதிகாரம்)

"யாழ்முத லாக வறுபத் தொருநான்
கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த"

"செம்மறையா ரணமுதனா லீரெட்டுக்கலைமுழுதும்தெரிந்தாளந்த
மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா
மருங்கசைத்த விமலையம்மா" (திருவிளையாடல்)

*என வருவனவற்றாலும் அறுபத்து நான்கு கலைகளுண்மை பெறப்படும்; அவை அக்கா இலக்கண முதல் அவித்தைப் பிரயோகம் வரை உள்ளனவாகும்; வேறுவகையாகக் கூறுவதும் உண்டு. அறுபத்து நான்கு கலைகளையன்றி அவற்றைப் பின்பற்றிய கலைகளும் உள்ளன என்பர்.*

### வேறுபாடுகள்

*அந்தணருக்குரிய கலைகள், மன்னருக்குரிய கலைகள், வணிகருக் குரிய கலைகள், வேளாளருக்குரிய கலைகள், மகளிருக்குரியன, பொது என அவற்றுள் வேறுபாடுண்டு. தமிழிலுள்ள பழைய நூல்களில் தமிழ்நாட்டிலும் பிற நாட்டிலும் இருந்த கலைகளைப் பற்றிய*

*செய்திகள் கூறப்படுகின்றன. அத்தகைய கலைகளிற் பலவற்றிற்குரிய நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன; இக்காலத்தும் சில உள்ளன.*

### இசையும் நாடகமும்

*தமிழ் நாட்டுக் கலைகளில் மிகச் சிறப்பாக இருந்து வந்தவை இசையும் நாடகமுமாம். பழைய நூல்களிற் காணப்படுகின்ற பலவகை இசைக்கருவிகளைப் பற்றிய செய்திகள் இக்காலத்தில் எந்த வகையாலும் அறிய முடியாமல் இருக்கின்றன. தோற் கருவி வகைகளில் அளவிறந்தனவும் யாழ்வகைகளிற் பலவும், தாளம் முதலியவற்றில் அவ்வாறே பலவும் இருந்தனவென்று தெரிகின்றது. இசைச்சங்கமொன்று பண்டைக்காலத்தில் இருந்ததென்றும், அதில் பல புலவர்கள் இருந்து இசைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்து வந்தார்களென்று இசையைப் பற்றிய பல நூல்களை அவர்கள் இயற்றியுள்ளார்களென்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் அறிவிக்கின்றன. பிற்காலத்திலும் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் சங்கீத வித்துவான்கள் பலர் இருந்து வந்தார்கள்.*

*நாடகக்கலையையும் தமிழர்கள் போற்றி வந்தார்கள். நாடகம் பலவகைப்படுதலையும், அதற்கு உரியவர்களுடைய இலக்கணங்களையும், பிறவற்றையும் விரிவாகக்கூறும் நூல்கள் முன்பு இருந்தன; இப்பொழுது சிலப்பதிகாரத்தால் மட்டும் சில செய்திகள் தெரியவருகின்றன.*

### ஓவியம்

*ஓவியக்கலை அல்லது சித்திர சாஸ்திரம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது.*

**"ஓவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையும்"**

*என்ற மணிமேகலையடி ஓவிய சம்பந்தமாக நூல் இருந்தமையை அறிவிக்கின்றது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் ஓவிய நூலென ஒன்றைக் கூறி அதிலிருந்து சில விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றார். ஓவியம் எல்லார் பலர் தமிழ் நாட்டில் நிறைந்திருந்தனர்.*

**"எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி**
**நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்**
**கண்ணுள் வினைஞரும்"**

*என்ற மதுரைக் காஞ்சிப் பகுதியால் இது விளங்கும். மாடங்களில் அழகிய சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன.*

**"மாடக்குச் சித்திரம்"**

*என்பது மாடங்களுக்கு அழகுசெய்வது சித்திரமென்று தமிழ்நாட்டார் கொள்கையைக் காட்டுகின்றது.*

**“சுடும ணோங்கிய நெடுநிலை மனைதொறும்**
**மையறு படிவத்து வானவர் முதலா**
**எவ்வகை வுயிர்களு முவமங் காட்டி**
**வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய**
**கண்கவ ரோவியங் கண்டுநிற் குநரும்”** **(மணிமேகலை)**

*என்பதில் மாளிகைகளிற் பலவகை ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்ந்து நின்றமை கூறப்படுதல் காண்க. ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் பழைமையானது; படமென்னும் பெயர் இக்காலத்தாலேயே வந்தது (படம் - வஸ்திரம்) ஒத்த அன்பினளாகிய தலைவியொருத்தியைப் பெறமுடியாமல் வருந்தும் தலைவன் தனக்கும் அவளுக்கும் உள்ள அன்பை வெளிப்படுத்த எண்ணி பனைமடலாற் செய்த குதிரையொன்றில் ஏறிவருவானென்றும் அப்பொழுது தலைவியைப் போன்ற படமொன்றை யெழுதி அதில் வைத்து எடுத்து வருவானென்றும் அகப்பொருள் நூல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் படத்தைக் கண்ட ஊரார் இன்ன மங்கையிடம் இவன் அன்பு பூண்டுள்ளானென்று ஐயமற அறிவாராம். இச்செய்தியால் ஒருவரைப் பார்த்து அவரைப்போலவே சித்திரம் எழுதும் வன்மை அக்காலத்தில் இருந்ததென்று அறிந்து கொள்ளலாம். ஓவியம் எழுதுபவர்கள் முதலில் தாம் கருதியிருக்கும் உருவத்தைக் குறித்துக் கொண்டு பின்பு வர்ணங்களையமைத்து அதனை அழகு படுத்துவார்கள். அவ்வாறு முதலில் எழுதப்படுவது புனையா ஓவியம் என்று வழங்கும். நெடுநல்வாடையிலும் மணிமேகலையிலும் புனையா ஓவியம் உவமையாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. திரைச் சீலைகளில் சித்திரங்கள் அமைக்கப் பெற்றிருந்தன; பாயற் கட்டிலைச் சுற்றிக் கட்டப்படும் திரைகளிலும் படுக்கையின் மேல் விரிக்கும் துணிகளிலும் மேற்கட்டியிலும் சித்திரங்கள் இருந்தன; ஆடைகளிற் சித்திரங்கள் எழுதப்பட்டன; நெய்யும்பொழுதே ஆடைகளிற் சித்திரங்களை அமைத்து வந்தார்கள்.*

**“குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையும்**
**திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியும்**
**நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்**
**பிடவமுந் தளவமு முடமுட் டாழையும்**
**குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமும்**
**செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்**
**எரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி**
**வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்**
**சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே**
**ஒப்பத் தோன்றிய வுவனம்”** **(மணிமேகலை)**

*என்று கூறப்பட்ட அடிகளினால் இயற்கை யெழிலை அவ்வாறே எடுத்துக்காட்டும் சித்திரப் படங்களை அமைக்கும் திறனைத் தமிழ் நாட்டார் அறிந்திருந்தமை புலப்படுகின்ற தன்றே?*

## சிற்பம்

*சிற்பக்கலை வல்லுநர்கள் மண்ணினாலும், செம்பு பொன் முதலிய உலோகங்களாலும் கல்லாலும், சுண்ணாம்பினாலும், மரத்தினாலும், தந்தத்தினாலும், பலவகையான பாவைகள் முதலியவற்றை அமைத்தார்கள். மன்னாற் பாவை அமைப்பவர் மண்ணீட்டாளரெனப்பட்டனர். தந்தத்தினால் தேர் முதலியன அமைக்கப்பட்டன. கல்லில் அமைந்த சிற்பங்களில் தமிழ்நாடு மிகவும் சிறந்ததென்பதை யார்தாம் மறுப்பார்? பிற்காலத்தில் பல்லவர்கள் சோழர்கள் அரசாட்சியில் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிற்பத் திறன் அமையக் கட்டப்பட்டன. அக்காலத்தில் பல சிற்பிகள் அவ்வரசர்களால் முற்றூட்டுப் பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கைவன்மையை இன்னும் வெளிப்படுத்திக்கொண்டு விளங்கும் கோயில்களைக் காணும் பிறநாட்டார் வியப்படைகின்றார்கள். சோழநாட்டுச் சிற்பிகள், 'திருவலஞ்சுழிப் பல்கணி, திருவீழிமிழலை வெளவானத்தி மண்டபம், ஆவுடையார் கோயிற் கொடுங்கை எனும் மூன்றைப் போலச் செய்ய இயலா; மற்றவற்றைப் போலச் செய்வோம்' எனவும் கொங்குநாட்டில் தாரமங்கலம், தாடிக் கொம்பென்னும் இரண்டிடங்களிலுள்ள சிற்பங்களைப் போல இயற்ற எங்களால் இயலாது எனவும் உடன்படிக்கை எழுதிக் கொடுக்கும் வழக்கமுண்டென்னும் கர்ணபரம்பரைச் செய்திகள் அவ்விடங்களில் உள்ள சிற்பத்தின் உயர்வை வெளிப்படுத்துகின்றன.*

*மரத்தினாலும் உலோகத்தினாலும் பலவகை வண்டிகள் செய்யப் பெற்றன. அவை வையம், பாண்டில், தேர் முதலிய பலவகையானவை, தாமரை மலரைப் போன்ற வண்டியொன்றின் வருணனை பெருங்கதையிற் காணப்படுகிறது.*

"யவன கைவினை யாரியர் புனைந்து
தமனியைத் தியன்ற தாமரை போலப்
பவழமு மணியும் பல்வினைப் பளிங்கும்
தவழ்கதிர் முத்துந் தானத் தணிந்தது
விலைவரம் பறியா வெறுக்கையுண் மிக்க
தலையாள வியன்றது தனக்கிணையில்லது
தாயொடு வந்த தலைப்பெரு வையம்" (உஞ்சைக் காண்டம்)

*என அதன் இயல்பு உரைக்கப்படுதல் காண்க.*

## அணிகள்

*பொன்னாலும் வெள்ளியினாலும் நவமணிகளாலும் செய்யப் பெற்ற பலவகை அணிகள் அக்காலத்தில் அணியப்பட்டுவந்தன. அவற்றை இயற்றும் பொற் கொல்லர்கள் தங்களுக்குரிய நூலில் நல்ல தேர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள்; நவமணிகளைப் பற்றிய இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தனர். அவற்றிற்குரிய நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலுள்ள மேற்கோட் சூத்திரங்களிலும் நவமணிகளைப் பற்றிய வரலாறுகள் பல கூறப் படுகின்றன. கல்லாடத்திலும், திருவிளையாடற் புராணங்களிலும், பழைய சாஸனங்களிலும் நவமணிகளுக்குரிய குணங்களும் குற்றங்களும் சொல்லப்படுகின்றன.*

## நெய்தல்

*நெய்யுந் தொழிலிலும் தமிழ்நாட்டார் சிறப்பெய்தியிருந்தனர். பருத்தியினாலும், எலிமயிர், ஆட்டுமயிர் முதலியனவற்றாலும், பட்டினாலும் ஆடைகள் நெய்யப் பெற்று வந்தன. கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர்.*

**"ஆளில் பெண்டிர் தாளிற் செய்த**
**நுணங்குநுண் பனுவல்"** (நற்றிணை)

**"பருத்திப் பெண்டின் பனுவ லன்ன"** (புறநானூறு)

*என வருவனவும்,*

**'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற்**
**கைவன் மகடூஉத் தனது கைமாண்பினால்**
**ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது'**

*என்ற இறையனாரகப் பொருளுரையும் மகளிர் நூற்று வந்த வழக்கத்தை விளக்குகின்றன.*

## ஆடைகள்

*ஆடைகளிற் பலவகை உண்டு. நீல நிறம் முதலிய பலநிறக் கச்சுகளும், ஆடைகளும், பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும் மணிகளையும் விளிம்பிலேயுடைய பட்டுடைகளும் இருந்தன.*

**"சிறந்த கருமை நுண்வினை நுணங்கறல்**
**நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்"** (மதுரைக்காஞ்சி)

**"நீலக் கச்சைப் பூவா ராடை"** (புறநானூறு)

**"கொட்டைக் கரையப் பட்டுடை"** (பொருநராற்றுப்படை)

*பாம்பின் சட்டையையும் மூங்கிலின் உரித்த தோலையும் பாலாவியையும் புகையையும் ஆடைகளுக்கு உவமையாக நல்லிசைப் புலவர்கள் கூறியிருப்பதனால் மிக மெல்லிய ஆடைகளைத் தமிழ் நாட்டார் அணிந்து வந்தனர் என்பது வெளியாகின்றது.*

"நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரி யன்ன வறுவை" (பொருநராற்றுப்படை)

"இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்" (மலைபடுகடாம்)

"இழையணி வாரா வொண்பூங் கலிங்கம்" (புறநானூறு)

*என்பன ஆடைகளின் நுண்மையை வெளிப்படுத்துகின்றமை காண்க.*

"பொருந்துபூம் பொய்கைப் போர்வையைப் போர்த்து" (சீவக)

*என்பதில் பொய்கைவடிவு எழுதின படாமென்று சொல்லப் படுகின்றது.*

## மாலை தொடுத்தல்

*மாலைகளைத் தொடுப்பதிற் பலவகையான விசித்திர முறைகளைத் தமிழ்நூல்கள் தெரிவித்திருக்கின்றன. "மலராய்ந்து தொடுத்தல்" என்று சீத்தலைச்சாத்தனாரும். "கடி மலர்ச் சிப்பம்" என்ற கொங்கு வேளிரும் அத்தொழிலைக் குறிக்கின்றனர். இண்டை, கண்ணி, தார் முதலிய பலவகைகள் மாலைகளில் உண்டு.*

## மடைநூல்

*உணவு சமைக்கும் முறைகளைக் கூறும் நூல் 'மடை நூல்' எனப்படும். அதைப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களிற் கூறப்படுகின்றன. பலவகை உணவு வகைகள் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. காலத்திற்கு ஏற்ற உணவுகளையும் சாதி, நிலம் முதலியவற்றிற்கேற்ற உணவுகளையும் அந்நூல்களில் அறிந்து கொள்ளலாம். சீவக சிந்தாமணியில் முத்தியிலம்பகத்தில் இருதுநகர்வென்னும் பகுதியில் சில பெரும்பொழுதிற்குரிய உணவு வகைகள் கூறப்பட்டுள்ளன.*

## சோதிடம் முதலியன

*சோதிடம், நிமித்தம் பார்த்தல் முதலிய கலைகள் தமிழில் இருந்தன. அக்கலைத் திறனுடையார் காலக் கணிதரென்றும் கணிகளென்றும் கூறப்படுவர். கணிதத்திற் சிறந்த சிலர் சங்கத்தேயிருந்த நல்லிசைச் சான்றோர்களும் காணப்படுகின்றனர். அரசன் போர்புரியச் செல்லும் பொழுது நற்சொல், காக்கை கரைதல் முதலியனவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம். அகத்திணையுள்ளும் பலவகை நிமித்தங்கள்*

சொல்லப்படுகின்றன. விரிச்சி நிற்றல், தோள், கண் முதலியன துடித்தல், காக்கை கரைதல், பல்லி ஒலித்தல் முதலிய நிமித்தங்கள் உண்டு. கட்டுவிச்சியென்னும் வெறியாடு பவளாற் கட்டுப் பார்த்தலும், வெறியாடுபவனாகிய வேலனாற் கழங்கு பார்த்தலுமாகிய நிமித்தங்கள் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ளன.

## வானசாஸ்திரம்

வானசாஸ்திரப் பயிற்சியும் அக்காலத்தே இருந்தன. சந்திரன் பரிவேடங்கொள்ளுங் காலத்தில் குறிஞ்சி நிலத்தார் மணம் செய்வார்கள். நெடுநல்வாடையில், கட்டிலுக்குமேலே கட்டியிருக்கும் மேற்கட்டியில் பன்னிரண்டு இராசிகளும் எழுதப்பட்டிருந்தன வென்றும் செய்தி உள்ளது; நட்சத்திரங்களின் பெயர்களிற் சில சங்க நூல்களில் வந்துள்ளன. அரசர் முதலியவர்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாடும் வழக்கம் முன்பே இருந்து வந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இறங்குங் காலத்தைக் கூடலூர் கிழார் ஏழு நாட்களுக்கு முன் ஒரு விண்மீன் விழுந்தமையால் அறிந்தனர்; அவன் துஞ்சிய காலத்து "இதனை முன்னரே அறிந்தேன்" என்று வருந்தி ஒரு செய்யுள் கூறியுள்ளார். அதில் மீன் விழுந்த நாளில் இருந்த நட்சத்திரங்களின் நிலை காணப்படுகின்றது (புறநானூறு, 229). இவற்றால் நட்சத்திரங்களைப் பற்றிய அறிவு இருந்தமை உணரப்படும்.

## மருத்துவம்

மருத்துவ நூல்களும் மருத்துவம் வல்ல நல்லிசைப் புலவர்கள் பலரும் இருந்ததைப் பழைய நூல்களால் அறியலாம். மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சி விரிவுற்றிருந்தது. தமிழ் வைத்தியம் சித்த வைத்திய மென்னும் பெயரால் இக்காலத்து வழங்கப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்கள் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டினர் பயின்று வந்த முறைகளை அறிந்த பிற்காலத்தார் எழுதியவை. அவை பெருஞ்சிறப்புடையன. ஆயுர் வேதத்தைப் பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது.

## நகரமைப்பு

நகரமைப்பு, வீடுகட்டுதல் முதலியவற்றைப் பற்றிய சிறந்த அறிவும் தமிழ்நாட்டாருக்கு இருந்தது. நகரங்களில் உள்ள கடை வீதிகள் ஒழுங்காக அமைந்திருந்தன. பல கடைகள் வகைவகையாக இருந்தன. சந்தி, சதுக்கம், அம்பலம், மன்றம், பொதியில் முதலிய இடங்கள் இருந்தன. அசுத்த நீரை ஊருக்கு வெளியே போக்குதற்குரிய கரந்து படை அல்லது கரந்துறை (Underground Drainage) யென்னும் ஜலதாரைகள் வீதியில் நடுவிற் கீழே இருந்தன. கற்களால் அவை

*மூடப்பட்டிருக்கும். வேண்டின் நீரை நிரப்பியும் வேண்டாவிடிற் போக்கியும் விடுவதற்குரிய வாவிகள் இருந்தன. அவை எந்திரவாவியெனவும், இலவந்திகை யெனவும் கூறப்படும்;*

"எந்திர வாவிய லிளைஞரும் மகளிரும்
தந்தமி லாடிய சாந்துகழி நீரும்" (மணிமேகலை)

"நிறைக்குறி னிறைத்துப் போக்குறிற் போக்கும்
பொறிற்படை யமைந்த பொங்கில வந்திகை" (பெருங்கதை)

*மாலை நேரங்களிலும் வேனிற்காலத்திலும் புகுந்து மகிழ்தற்குரிய சோலைகள் பல இருந்தன; செய்குன்றங்களும் உண்டு:*

"சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்
வேணவா மிகுக்கும் விரைமரக் காவும் (மணிமேகலை)

*இவற்றையன்றி,*

"எந்திர கிணறு மிடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியு மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்" (மணிமேகலை)

*ஆகிய பல இடவகைகளும் உண்டு. அரசர் முதலியவர்களுக்குத் தனித் தனியே வீதிகள் இருந்தன.*

*பலவகைத் தொழில் செய்வாருக்குரிய வீதிகள் முறைப்படி அமைக்கப்பட்டிருந்தன. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் மதுரை, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி மாநகர், காஞ்சி முதலிய நகர அமைப்புகளைப் பற்றிச் சொல்லும் பகுதிகளால் அக்காலத்தில் நகரங்கள் அமைக்கப்பட்ட முறைகள் அவற்றிலிருந்த தெருக்கள், இடங்கள் முதலியவற்றைப் பற்றிய பல செய்திகளை அறியலாம்.*

*மதுரை நகரத்திலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் நாளங்காடி அல்லங்காடி என்ற இருவகைக் கடைத் தெருக்கள் இருந்தன. நாளங்காடி - காலைக்கடை; அல்லங்காடி - மாலைக்கடை. அவ்விரு நகரங்களிலும் பலவகைக் கோயில்கள் இருந்தன.*

*அரசர்கள் வாழும் நகரங்களில் அகழியும் மதிலும் இருந்தன. மதிலின் மேற் பகைவர்களைத் தடுத்தாற்குப் பலவகைப் பொறிகள் அமைக்கப் பெற்றிருந்தன. கோட்டை வாயில்களும் ஊருக்குள் பிறரறியாதவாறு வெளியிலிருந்து புகுதற்குரிய நுழைவழிகளும் உண்டு. காஞ்சி நகர் தாமரை மலர்போல அமைந்துள்ளதென்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.*

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொ டுபுரையுஞ் சீருர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்" (பரிபாடல்)

*என்பதில் மதுரையும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. பெருங் கதையில் இராசகிரியமென்னும் நகரத்தைத் தாமரை மலராகவும் பலவகைத் தெருக்களைப் புறவிதழ் புல்லிதழ் அகவிதழ் முதலியவைகளாகவும் அரசன் அரண்மனையை நடுவிலேயமைந்த கர்ணிகையாகவும் ஆசிரியர் உருவகம் செய்துள்ளார். இதனால் நகரங்கள் அழகும் ஒழுங்கும் சிறந்த வீதிகளால் அமைந்திருந்தன.*

## கட்டிடச் சிற்பம்

*வீடுகளை அமைப்பதில் சில முறைகள் அக்காலத்தில் உண்டு.*

"பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"
(நெடுநல்வாடை)

*என்பதால் அவரவர்களுக்கேற்றபடி மனைகள் அமைக்கும் வழக்கம் இருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம். வீடுகளைக் கட்டுவதற்காக அஸ்திவாரம் போடும் காலம் நெடுநல்வாடையிற் காணப்படுகின்றது. கோபுரங்களும் வாயின் மாடங்களும், நிலாமுற்றங்களும் தெற்றிகளும் அறைகளும் அமைக்கப்பட்டன. கஜலக்ஷ்மியின் திருவுருவம் நிலைக்கு மேலே மத்தியில் முற்காலத்தும் அமைக்கப்பட்டமையை நெடுநல் வாடை முதலியவற்றால் அறியலாம். மாடங்களாகவே சில வீடுகள் கட்டப் பட்டிருந்தன. வீட்டின் சுவர்களிற் பலவகைச் சாளரங்களை வைப்பதுண்டு; 'காலதர்' என்று அவை கூறப்படும்; காற்றுப் போகும் வழியென்பது அதன் பொருள். இதனால் தேக சௌகரியத்திற்குரியனவும் கவனிக்கப் பெற்று வந்தமை தெரிகின்றது.*

## கூபநூல்

*கிணறுகளை வெட்டும் முறைகளையறிவிக்கும் கூப நூல் ஒன்று உண்டு. இன்ன இடத்தில் வெட்டினால் நல்ல ஜலமிருக்குமென்பதை அதனால் எளிதில் அறியலாம். உதயணன் இந்நூலில் தேர்ச்சி யுடையவனாகவிருந்தானென்ற செய்தி பெருங்கதையில் காணப்படும்.*

## காவல் நூலும் கரவடநூலும்

*காவல் காத்தற்குரிய காவல்நூல் கரவடநூல் முதலிய பலநூல்களின் பெயர்கள் தெரியவருகின்றன. நூலேணியை அரையிற் சுற்றியவர்களாய்க் கறுப்புடையை அணிந்துகொண்டு கள்வர்கள் பதுங்கி வருவார்களென்றும் அவர்களை ஒற்றியறிந்து காவலர்கள்*

பிடிப்பார்களென்றும் அக்காவலர்கள் காவல்நூல் கரவடநூல் என்னும் இரண்டிலும் வல்லவர்களாக இருந்தார்களென்றும் மதுரைக் காஞ்சியும் அதன் உரையும் அறிவிக்கின்றன. தக்கயாகப் பரணி உரையாசிரியர்,

> "உடன்கள்ளரும் ஒற்றிக் கொடுப்போரும் பெருநிலை
> நிற்போரும் கரவட சாத்திரடும் வேண்டும்"

என்ற ஓர் இடத்திற் களவுக்குரிய உபகாரணங்கள் சிலவற்றைத் தெரிவிக்கின்றார்.

## போர்க்கலை

போர்க்கலை தமிழ்நாட்டில் தனி இலக்கணத்தோடு இருந்தது. தொல்காப்பியம் புறத்திணையியலிலும் பன்னிரு படலத்திலும் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களிலும் கூறப்பட்ட புறத்திணைத் துளைகளிற் பெரும்பாலான போரையும் அதனைச் சார்ந்தவற்றையும் பற்றிய செய்திகளைக் கூறுவனவாம். பகைவர் களுடைய நாட்டிலுள்ள பசுக்கள் மகளிர் முதலியோருக்குப் போரினால் ஏதம் வருமென்று அஞ்சி "யாம் போர் செய்யப் போகிறோம்; மகளிர் முதலியோர் இந்நாட்டை நீங்கிக் காவலுடைய நாட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று போர்புரியச் செல்வோர் பறையறைவிப்பர். தாமே செல்ல ஆற்றலில்லாத பசுக்களை அப்பகைவரது நாட்டிலிருந்து தம் நாட்டிற்குக் கொண்டு வந்து விடுவார்கள். அது முதல்போர் தொடங்கப்படும்.

நிரைகவர்தல், போர்செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், போர் செய்தல், வெற்றியுறுதல் என்று போரில் பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி முதலிய திணைகளாக நூல்கள் வழங்குகின்றன. அவ்வத் திணைக்குரிய மலர்களைச் சூடிக் கொண்டு போர்புரிதல் வழக்கம். ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனி அடையாளப் பூக்கள் உண்டு. போர்புரிகையில் அவற்றை வீரர்கள் அணிந்து கொள்வதால் அவர்களை இன்னாருடைய படையைச் சேர்ந்தவர்களென்று எளிதில் தெரிந்து கொள்வார்கள். அத்தகைய பூக்களை பொன்னாற் செய்வித்து அணிந்து கொள்வதும் உண்டு. புறத்திணைகளுள் ஒவ்வொன்றிலும் பல துறைகள் உண்டு. தோணிகளில் ஏறி அகழிற் போர் புரிதலும் மதில் மீதேறிப் போர் புரிதலும் ஆகிய பலவகைப் போர்கள் உள்ளன. வீரர்களுக்குள் படைத்தலைவர்கள் முதலிய வேறுபாடுகள் உண்டு. சேனாதிபதி களுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. அவற்றுள் ஏனாதி என்பது ஒன்று. அப்பட்டத்துக்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப்பெறும்.

**“போர்க்கூட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்**
**கார்கடல் பெற்ற கரையன்றோ போர்க்கெல்லாம்**
**தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ் சேர்**
**ஏனாதிப் பட்டத்திவன்”**

*என்பது இங்கே அறிதற்குரியது. வீரர்களுக்குரிய பல ஆயுதங்களின் பெயர்களை, நூல்களிற் காணலாம். வேல், வாள், அம்பு, கிடுகு என்பவற்றிற் பலவகைகள் உண்டு.*

கப்பற்றொழில்

*தமிழ் நாட்டார் கப்பல்களைச் செய்து அவற்றைப் பல வகையிற் பயன்படுத்திக் கொண்டனர். காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் உள்ள பல பண்டகசாலைகளில் பல நாடுகளிலிருந்து வந்த பண்டங்கள் இருந்தனவென்று பட்டினப்பாலை தெரிவிக்கின்றது. பிறநாட்டிலிருந்து கப்பல்களிலும் பல பண்டங்கள் வந்து குவிந்தன.*

**“வாலுளைப் புரவியொடு வடவளந்த தருஉம்**
**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை”**

*என்ற பெரும்பாணாற்றுப்படையடிகளால் குதிரைகள் முதலிய வடநாட்டுப் பொருள்கள் தமிழ்நாட்டுக்கு நாவாய்களில் வந்தமை தெரியவரும்.*

**“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்”** **(பட்டினப்பாலை)**

**“பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழத்தரும்**
**ஆடியற் பெருநாவாய்”** **(மதுரைக் காஞ்சி)**

**“விழுமிய நாவலாய் பெருநீ ரோச்சுநர்**
**நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவி”** **(மதுரைக்காஞ்சி)**

*என்பவற்றாலும் இச்செய்தியை அறியலாம்.*

*‘கட்டுரை வகை’ என்ற ஒரு கலையின் பெயர் மணிமேகலையிற் கூறப்படுகின்றது. பெருங்கதையாசிரியர் தொடுத்துக் கூறும் சொல்வன்மையே அது. பேராசிரியர் ‘வாக்கின் விகற்பம்’ என அதனைக் குறிப்பார். இன்னாரிடம் இன்னபடி பேசவேண்டுமென்பதும், இன்ன பொருளை இவ்வாறு அமைத்துப் பேசவேண்டுமென்பதுமாகிய பல வரையறைகளை இலக்கியங்களை நுணுகி ஆராய்வதனால் அறியலாம். அரசர் முதலியவர்களிடத்தில் ஒரு துயரச் செய்தியையோ அறிவுரையையோ கூறப்புகுங்காலத்து அவர்களை வாழ்த்தி*

*அவர்களுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டிய பின்னரே அவற்றைச் சொல்லுதல் புலவர்களின் வழக்கம். வாழ்த்தின் வகைகளுக்குரிய இலக்கணங்கள் சில உண்டு.*

## அளவை நூல் முதலியன

*அளவை நூல், எண்ணூல், கனாநூல், கோழிநூல், குதிரைநூல், யானை நூல், புதையல் நூல், யோகநூல் முதலிய நூல் வகைகளும் கரந்துரை கணக்கு கோலங் கோடல் முதலிய வேறு பலகலைகளும் இருந்தன.*

*தங்களுடைய கருத்துக்களைப் பிறருக்கு அறிவிப்பதற்குரிய பலவழிகள் தெரிய வருகின்றன. கோவலனுக்கு மாதவி தாழை மடலில் செம்பஞ்சுக் குழம்பிற் தோய்த்த பித்திகையரும்பினால் ஒரு திருமுகம் எழுதினாளென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வாசவதத்தையின் வண்ண மகளாக இருந்த மானனீகை யென்பவளும் உதயணனும் தத்தம் உள்ளக் கருத்தை வாசவதத்தையின் முகத்தில் யவன பாஷையில் ஒருவருக்கொருவர் எழுதிவிடுத்த சித்திர வெழுத்துக்களால் அறிந்து கொண்டார்களென்ற செய்தி பெருங்கதையில் காணப்படுகிறது. அந்நூலில் இவ்வரலாற்றைக் கூறும் பகுதி முகவெழுத்துக்காதை யென்றே பெயர் பெறும்.*

*அரண்மனையில் இருந்த நாகமாலை யென்பவள் அங்கே நடந்த நிகழ்ச்சிகளை மந்தணமாகச் சீவகனுக்கு அறிவித்து வந்தாள். அவள் ஒரு குவளை மலருக்குள் ஒரு திருமுகம் வைத்து அனுப்பினாளென்றும் அக்குவளையின் காம்பே அத்திருமுக வோலையின் சலாகையாக அமைந்திருந்ததென்றும், அவ்வோலை அவ்விதழுக்குள் பொருத்தப் பெற்றிருந்ததென்றும் அதனுள் எழுதப்பட்டவை துகிலிகைக் கணக்காலெழுதப்பட்டவையென்றும், அதனை அதற்கு அமைந்த முறைப்படி சீவகன் பிரித்துக் காம்பிற் சுற்றி வாசித்தறிந்தானென்றும், சீவகசிந்தாமணியால் அறியலாம்.*

*பிறநாட்டுக் கலைவல்லார் இந்நாட்டில் வந்து தம் ஆற்றலைப் புலப்படுத்தி வந்தனர்.*

**“மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்**
**அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்**
**தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி”** **(மணிமேகலை)**

*வாழ்ந்து வந்தனர். பிற நாட்டாரிடமிருந்து கற்றவற்றையன்றித் தமிழ்நாட்டாரே அறிந்து பயின்ற கலைகளும் நூல்களும் பல உண்டு. வடமொழியிலுள்ள கலைநூல்களையும் தமிழிற் பெயர்த்துக் கொண்டார்கள்.*

## செய்யவேண்டுவன

*இக்காலத்தில் மேனாட்டாருடைய உதவியினாற் பல புதுக் கலைகள் உலகில் உலவுகின்றன. அவற்றிற்குரிய நூல்கள் பல ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வருதல் வேண்டும். பண்டைக் காலத்தினர் பிறமொழியிலுள்ள கலை நூல்களை மொழி பெயர்த்துக் கொண்டது போல இக்காலத்துக்கேற்ற நூல்களையும் பிறமொழியிலிருந்து அறிஞர்கள் பெயர்த்தமைத்தல் முறையேயாகும். நம் நாட்டில் சிறந்தோங்கியிருந்த சிற்பம் முதலிய கலைகளில் திறத்திலும் நம்முடைய முயற்சி சிறக்க வேண்டும். ஏட்டுச் சுவடிகளில் உள்ள கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்த வேண்டும். கலைவல்லார்களுடைய குடும்பங்களிலுள்ளோரிடம் பல செய்திகளை வாய்மொழியாகக் கேட்டறியலாம். அவ்வாறு அறிந்து பலவற்றைத் தொகுக்கலாம். என்னுடைய இளமையில் திருவீழி மிழலையில் சிறந்த சிற்பியொருவர் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவர் பல விஷயங்களைத் தெளிவாகச் சொன்னார். சீவக சிந்தாமணியில் வந்துள்ள யானைப் பேச்சு இப்பொழுதும் வழங்கி வருகின்றனவா வென்று திருவிடைமருதூரிலிருந்து ஒரு யானைப் பாகனைக் கேட்டேன். அவன் அவை அப்படியே வழங்குகின்றனவென்றும், யானையின் இலக்கணங்கள் முதலியனவற்றைப் பற்றித் தமிழில் எழுதப் பெற்றுள்ள சுவடியொன்று உள்ளதென்றும் கூறினான், அதைப் பார்க்க வெண்ணிப் பெற முயன்றும் அது கிடைக்கவில்லை.*

## 2. தமிழர் பண்பாடு - ஒரு விளக்கம்

**- டாக்டர் சோ.நா. கந்தசாமி**

இந்நூற்றாண்டில் பண்பாடு என்ற சொல் ‘Culture’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஆக்கமாக இரசிகமணி டி.கே.சி. அவர்களால் அறிமுகம் செய்யப் பெற்றது. பண்பாடு என்ற சொல்லிற்குரிய சரியான விளக்கங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலப்படுத்துவதற்கு அறிஞர்கள் முயன்றிருப்பினும் முழுமையான விளக்கம் இதுகாறும் வழங்கப்படவில்லை. ‘பண்பாடு’ என்ற பொருண்மையைக் குறித்துத் தமிழ் இலக்கியங்களில் பொறிக்கப் பெற்றுள்ள கருத்துக்கள் பற்பல. மாந்தனியலாரும் சமுதாயவியலாரும் பண்பாடு பற்றிப் பல்வேறு விளக்கங்களை வழங்கி உள்ளனர். இச்சான்றோர்களின் நெறியில் பண்பாடு பற்றிய விளக்கத்தை இக்கட்டுரையில் காண்போம்.

நிலத்தை உழுது பண்படுத்தி விளைவதற்கு உரியதாகச் செய்யும் தொழிலை Agriculture என்று கூறுவர். Agri என்று கூறுவர். Agri என்ற சொல்லிற்கு நிலம் என்பது பொருள். ஆதலின் நிலப்பண்பாடு என்ற பொருண்மையில் Agriculture என்ற சொல் பயிலப் பெறுகிறது. இச்சொல் உழவுத் தொழிலை உயர்த்துவதாகும். மனிதனின் ஐம்புலன்களையும் மனத்தையும் சீலம், நெறி, ஒழுக்கம் முதலிய உணர் பண்புகளால் உழுது பண்படுத்தி நல்வாழ்க்கைக்கு உரியதாகச் செய்யும் முயற்சியைப் பண்பாடு குறிப்பதாகக் கொள்ளலாம். பண்பாடு என்பது விழுமிய பண்புகள் பலவும் நிரம்பப் பெற்றுக் குடும்பத்தாருடனும் உலகத்தாருடனும் பொருந்தி அன்புற்று வாழும் மனப்பக்குவத்தைக் குறித்தல் காணலாம். பண்பாடு என்ற பொருளில் சால்பு, சான்றாண்மை, குணநலம் முதலிய பல சொற்கள் இலக்கியங்களில் இடம்பெற்று உள்ளன. உலக நடைமுறைக்கு ஏற்றாற்போல் ஒத்து நடப்பதே பண்பாடு என்று சங்கப் புலவர்கள் எண்ணி உள்ளனர். கலித் தொகையில்,

“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்” (133: 8)

என இடம்பெறும் பகுதி பண்பாட்டினைப் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

உலகப் பொதுமறையாகிய திருக்குறள் பண்பாட்டின் பெட்டகமாக அமைந்திருத்தலை ஒருமுறை கற்பாரும் உணர்ந்து கொள்வர். குறிக்கோள் உடைய குடிமக்களுக்குரிய இலக்கணங்களையும் இயல்புகளையும் பொருட்பாலில் உள்ள குடியியலில் உடன்பாட்டு வாசகத்தாலும் எதிர்மறையானும் திருவள்ளுவர் குறைவறக் கூறியுள்ளார்.

*பெருமை என்னும் அதிகாரத்தில் "பணியுமாம் என்றும் பெருமை", "அற்றம் மறைக்கும் பெருமை" என்று பணிவுடைமையும் பிறர் குற்றம் காணாமையும் சிறந்த பண்பாடாகக் குறிக்கப் பெற்றன. சான்றாண்மை என்ற அதிகாரம் முழுமையும் மாந்தரின் மனப்பண்பாட்டை விரித்துரைப்பது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் பொருந்தியவரே சான்றோர். அவர்களே பண்பாட்டாளர். பண்புடைமை என்ற அதிகாரம் முழுமையும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். ஒரு மனிதனுக்கு அறிவுடைமை தேவைதான். எனினும் பண்பாடு அமையவில்லையேல் அறிவினால் பயனில்லை. அறிவைவிட பண்பாட்டிற்குத் திருவள்ளுவர் முதன்மை தந்துள்ளார். படிக்காத பாமரர்கள் கூடப் பண்பாடு படைத்தவர்களாக விளங்குகின்றனர். தாயுமானவர், கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்ற அழுத்தம் கொடுத்துப் பாடுதல் அறியத்தக்கது. பண்பாடு இல்லாத வரிய அறிவினரை மரம் என்றே வள்ளுவர் இடித்துக் கூறுகிறார்.*

**"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்"**

*மக்களாக இருந்தும் மக்களுக்குரிய பண்புகளைப் பெறாதவர்களை உயர்திணையாகக் கருதாமல் அஃறிணையாகவே தொல்காப்பியரும் கருதியுள்ளார். பண்பாடு படைத்த மாந்தரையே மக்கட் பண்புடையர் என்று மதித்துள்ளார். மனப்பக்குவம் பல நிலைகளில் பண்பாடாக வெளிப்படுகிறது. பொறுமை, சால்பு, விட்டுக்கொடுத்தல், பிறர்நலம் பேணுதல், நற்சார்பு, பெருமிதம், அருளுள்ளம் என்ற பல வடிவங்களில் ஒருவரின் பண்பாடு புலப்படுகிறது. இத்தகைய பண்பாடு வாய்ந்த நல்லோர் நட்பினையே நாலடியார் பரிந்துரைக்கிறது. இந்நூலினுள்,*

**"பண்பாற்றும் நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்**
**நண்பாற்றி நட்கட் பெறின்"**

*எனவரும் பாடற்பகுதி இங்கு எண்ணத்தக்கது. சிறந்த பண்பாளர்கள் இருப்பதால்தான் உலகம் நிலைபெற்றுள்ளது என்ற உண்மையினைப் புறநானூறு 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற பாடலில் உணர்த்தியுள்ளது. திருவள்ளுவரும் "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" எனப் புகன்றார்.*

*பண்பாடு என்பது பிறப்பினால் அல்லது கல்வியினால் மட்டும் வருவது அன்று; இயல்பாக, அமைவது உவர்மண் நிலத்திலும் நல்ல நீர்தோன்றும்; மலைநிலத்திலும் உப்புநீர் தோன்றும். எனவே, எந்த நிலத்திலும் எந்த நீரும் தோன்றுதல் போல், எவ்வகைப் பிரிவிலும் எவ்வகை மாந்தரும் தோன்றுவார். எனினும் மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுபவர் மனத்தின் மாண்புடையவரே ஆவர் என்பது நாலடியார் நல்கும் விழுமிய கருத்தாகும்.*

**“கடல் சார்ந்தும் இன்நீர் பிறக்கும்; மலைசார்ந்தும்**
**உப்பீண் டுவரி பிறக்குமால் தத்தம்**
**இனத்தனையர் அல்லர் எறிகடல் தண்சேர்ப்ப**
**மனத்தனையர் மக்கள் என் பார்”** (25.5)

*இப்பாடல் மனப்பக்குவத்தை மையமாகக் கொண்டுதான் மக்களின் பண்பாடு வெளிப்படும் என்பதை வலியுறுத்துகிறது. நாலடியாரில் பண்பாளர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது அழகாக விளங்கப் பெற்றுள்ளது. பொதுவாகப் பிறர் பேசும் இரகசியங்களை (மறை பொருளை) ஒற்றுக் கேட்பது மாந்தர் இயல்பு. அத்தகைய நிலைகள் வரும் பொழுது காதினைச் செவிடாக வைத்துக் கொள்வதுதான் சிறந்த பண்பாடு, கண்ணெடுத்துப் பார்க்காமல் இருப்பதுதான் பண்பாடு. ஆயிரம் யானைகளை வென்றவனைவிட, தன் பொறிபுலன்களை வென்றவனே பெருவீரன் என்று சான்றோர் போற்றினர். மற்றவன் மனையாளை நோக்காமையினைப் பேராண்மை என்ற திருவள்ளுவர் கூறுதல் காணத்தக்கது. நாலடியார், மாற்றான் மனைவியை நோக்கும் நிலையில் கண்களைக் குருடாக வைத்துக் கொள்ள வேண்டுமெனச் சுட்டுகிறது. இங்ஙனம் கூறும் சொற்களின் அடிப்படைப் பொருள் தீய நோக்கோடு பார்த்தல் கூடாது என்பதே ஆகும். மற்றொரு வகைப் பண்பாட்டினையும் நாலடியார் சுட்டுகிறது. உலகியலில் ஊதியம் கருதி ஒருவன் கூறியதைச் சுமந்து கொண்டுபோய் மற்றவனிடம் புறம்பேசுதல் பொதுவாகக் காணப்படுகிறது. இங்ஙனம் புறங்கூற வேண்டிய தேவை வரினும் தன் வாயினை ஊமையாக வைத்துக் கொள்வதே உயர்ந்த பண்பாடு என்று நாலடிப் புலவர் நவின்றுள்ளார். இங்ஙனம் தன்னை நெறிப்படுத்திக் கொள்ளும் பண்பாளனுக்கு வேறு அறங்கள் கூறத் தேவையில்லை என்கிறார் நாலடிப் புலவர்.*

**“பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து**
**ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய**
**புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்**
**அறங்கூற வேண்டா அவற்கு”** (16:8)

*இப்பாடல் மனித குலம் முழுமைக்கும் ஏற்புடைய பண்பாட்டைக் கற்பிக்கிறது இத்தகைய ஒழுக்கமுடையவனே பண்பாடு வாய்ந்தவன்.*

*சில நிலைகளில் அறிந்தோ அறியாமலோ ஒருவர் புண்படும்படி சிலர் பேசுதல் உண்டு. அதனைக் கேட்டுப் பொறுத்திருத்தலே பண்பாடாகும். ஈடுகட்டும் வகையில் ஒருவர் பேசியவரைக் குறைகூறி இழிசொற்களால் குத்திக் காட்டுதல் பண்பாடு அன்று. இச்செயலினை யாவர்க்கும் நாலடியார் அறிவுறுத்துகிறது. நாய் கவ்வியது என்ற*

*நல்லோர் நாயைக் கவ்வுவது இல்லை என்பது எவ்வளவு உயரிய பண்பாட்டைக் காட்டுகிறது. எண்ணிப் பாருங்கள். நாலடியார் பாடலை இங்கே காண்போம்:*

**"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்**
**பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்**
**கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ**
**மேன்மக்க தம்வாயால் மீட்டு"** (7: 10)

*இப்பாடலில் சான்றோராகிய மேன்மக்களைச் சிறந்த பண்பாளராக நாலடியார் போற்றுகிறது. இதுகாறும் பண்பாடு என்பது விழுமிய பண்புநலன்களைப் பெற்றிருத்தலைச் சுட்டுவதாகத் தமிழ் இலக்கியங்களின் வழி அறிந்து கொண்டோம். இப்பண்புகள் யாவும் அகப்பண்பாடாகவே* (Internal Culture) *கொள்ளத்தகுவன. இவற்றில் முதிர்ச்சியால் விளைவது புறப்பண்பாடு* (External Culture). *இசை, ஆடல், சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய படைப்புக்கள் யாவும் அகப்பண்பாட்டின் அடிப்படையில் புறப்பண்பாட்டின் விளக்கங்களாக அமைவன. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் கலை வளம், இலக்கிய வளம், அறவுணர்வுகள், சமய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பனவெல்லாம் சிறந்த பண்பாட்டின் படைப்புகளாக மதிக்கத்தக்கன. இவ்வகையிலும் தமிழர்கள் சிறந்த கலைச் செல்வங்களையும் இலக்கியச் செல்வங்களையும் மெய்ப்பொருட் கொள்கைகளையும் நனி சிறந்த பண்பு நலன்களையும் ஒருங்கே படைத்த வரலாற்று நாயகர்கள் என்பது அறிஞர் பலரின் ஒருமித்த கருத்தாகும்.*

*ஆங்கில நூல்களில் பண்பாடு குறித்து அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து எழுதியுள்ளனர். அவர்களில் இ.பி.டெய்லர் என்பார் கருத்தினை மட்டும் இங்கு ஒப்புமை கருதிச் சுட்டுதல் தகும்: "சமுதாயத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் மனிதரால் ஈட்டப் பெறும் அறிவு, நம்பிக்கை, கலை, நிதிகள், விதிமுறை, வழக்கம் என்பனவும்; ஏனைய ஆற்றல்களும் பழக்கங்களும் ஆகிய ஒட்டுமொத்தமான முழுமையினைப் பண்பாடு சுட்டுகின்றது. பண்பாடு என்பது கல்வியறிவோடு பொருந்திய எல்லா ஒழுங்குமுறை, நடத்தைமுறை வகைமைகளையும் உள்ளடக்கியதாகும்."*

*மேற்குறிப்பிடப் பெற்ற பண்பாடு பற்றிய வரைவிலக்கணத்திற்குத் தமிழர் பண்பாட்டு விளக்கம் முற்றிலும் பொருந்தியிருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.*

## 3. திருக்குறள் நெறியில் அறிவாண்மை

**- திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

*திருக்குறள் உலகப் பொதுமறை, அது மறைகளின் கருத்தை உள்ளடக்கி விளக்குவது; என மேன்மை உணர்த்துவது; கீழ்மை விலக்குவது; தெய்வப் புலமைத் திருவள்ளுவர் செந்தண்மை பூண்டவர்; மெய்மை உணர்ந்தவர்; தமிழரது தொன்மை நெறிகளை திருக்குறள் வாயிலாக உணர்த்தியுள்ளார். தமிழ்நெறி இறை - உலகு - உயிர் என்ற முப்பொருள் உண்மையை உணர்த்துவதாகும். செருக்கு, இருவினை, மறைப்பு என்ற மூன்றின் வகைகளை உணர்ந்து அவற்றை விலக்கி உயிர் நிலை பெற வழிகாட்டுவது தமிழர் நெறி. அந்நெறியே திருவள்ளுவரால் எடுத்தாளப்படும் நெறி.*

*உலகில் உயிரினங்கள் அனைத்தும் அறிவுடையன. அவை தம் வினைக்கு ஈடாகப் பெற்ற உடம்புகளுக்கு ஏற்ப ஓரறிவு முதல் ஆறறிவு இலக்கணத்தில் மரபியலால் அறியலாம்.*

*தொல்காப்பியம்,*

**"மாவும் மாக்களும் ஐயறிவினவே**
**மக்கள் தாமே ஆறறிவுயிரே"**

*எனக்கூறும். ஆறறிவு படைத்த மனித இனம் இயல்பாக அறிவு விளக்கம் பெறுவதில்லை. அவ்வறிவை விளக்கம் உடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். தெளிவுபடுத்தி வாழவேண்டும். வாழ்வின் மேன்மைக்கு மிக இன்றியமையாதது அறிவு. மனித வாழ்க்கை பல தடைகளை உடையது. பழிக்கப்படும் வாழ்க்கையன்றி வாழ வேண்டுமானால் நாம் தொடங்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஏற்படும் தடைகளைப் போக்க வேண்டும். பழிக்கப்படும் செயல்களுக்குப் பொறிபுலன்கள் காரணமாக இருக்கின்றன. செருக்கு, இருவினை, மறைப்பு ஆகிய பகைகள் தடைகளாக நம்மை அழிக்கத் தொடங்குகின்றன. பொறிகளாகிய கருவிகளால் ஏற்படுகிறது. கீழ்மைச் செயல்களைப் போக்கும் கருவியாக இருப்பது அறிவு. புலப்பகையும் மலப்பகையும் உள்ளுணர்வை அழுக்காகாமல் பாதுகாப்பது அறிவு. ஆதலின் அது ஒரு நகரைக் காக்கும் அரண் போல வாழ்க்கைக்கு அரணாகவும் பகையை வெல்லும் கருவியாகவும் இருக்கிறது என்பதைத் திருவள்ளுவர்,*

**"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்"**

*என்று கூறியுள்ளார்.*

*அறிவு - கருவி; அது ஐம்புலக் குறும்பை அடக்கத் துணைசெய்யும். அவ்வடக்கத்தால் மலப்பகை நீங்கி மெய்யுணர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்து முழுமை பெறலாம். பிறருக்கும் வழிகாட்டலாம் என்பதைத் திருவள்ளுவர்,*

**"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"**

*என்ற குறளால் விளக்கியுள்ளார்.*

*அறிவுடைமை என்ற அதிகாரத்தில் அறிவு பற்றிய செய்திகள் பல கூறியுள்ளார். எனினும் திருக்குறளின் எல்லாப் பகுதிகளிலும் அது பற்றிக் கூறப்படுகிறது. நமது மனம் கலவையை உடையது. அது புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, நாற்றம் என்னும் வரியாகப் பொறிகளாகிய நா, கண், உடம்பு, செவி, மூக்கு ஆகியவற்றைப் பற்றி செல்லும். செல்வத்தால் விளையும் தீமைகள் பல. அவ்வாறு கீழான வழிகளில் செல்லாமல் தடுப்பதே அறிவு. இதனையே அருள்திரு சாந்தலிங்க அடிகளார்,*

**"வாழி நெஞ்சமே சென்றிடல்**
**நின்றிதோர் வார்த்தையெற் குரைசெய்வாய்"**

*எனக் கூறுகிறார்.*

*மனம் தன் போக்கில் சென்றால் ஐம்புலனாலும் கேடு விளையும். இதனை மாணிக்கவாசகர் "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்புலன்" என்றும் "மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப யான் உன் மணி மலத்தாள் வேறுபட்டேனை விடுதிகண்டாய்" என்றும் கூறுகிறார். இத்தகைய புலன் அழுக்குகளில் செல்லும் தீமையை நீக்கி நல்லதன் பால் மனத்தைச் செலுத்துவதே அறிவாகும். நல்லது என்பது தனக்கும் பிறருக்கும் தீங்கு பயவாதது ஆகும். மாணிக்கவாசகர் புலன், பொறி ஆகியவற்றை நல்லதன் வழியே செலுத்திய நிலையை,*

**"சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன் தான்**
**கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குகள்**
**மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார**
**வந்தனஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை**
**மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்**

**தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனி**
**தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"**

*என்று கூறியுள்ளார். இவ்வாறு நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உணர்ந்து நல்வழியிலே செலுத்துவதே அறிவாகும் என்பதைத் திருக்குறள்,*

**"சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பா லுய்ப்ப தறிவு"**

*என்று அறிவின் இலக்கணமாகக் கூறுகிறது.*

*அறிவின் வளர்ச்சிக்குத் துணை புரிவது கல்வி. பேராற்றங் கரையில் மணலைத் தோண்டுகிறோம். தோண்டத்தோண்டத் தண்ணீர் மிகுதியாக ஊறுகிறது. எவ்வளவு முயலுகிறோமோ அவ்வளவு நீர் கிடைக்கும். அதுபோல் நம் அறிவு வளர்ச்சிக்கு நமது கல்வி துணையாகும் என்பதைத் திருவள்ளுவர்,*

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"**

*என்று கூறியுள்ளார்.*

*அக்கல்வி அறிவால் பெரும் பயன் குற்றங்கள் நீங்குதல், நல்லவனவற்றை உணர்த்தல் ஆகியன. நல்ல நூல்களள் மனிதன் அன்புடையவனாக, இன்சொல் கூறுபவனாக, மெய்மை உணர்பவன் ஆக, இறைவனாக இருக்க வேண்டும் எனக் கூறும். அவற்றைக் கற்றவன் தன் வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் தன் கல்வியறிவால் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற எண்ணம் உடையவனாக எல்லோரிடமும் இனிது பழகி நன்னெறியில் ஒழுக வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால்தான் கல்வியறிவு பயனுடையதாகும் இன்றேல் நூல்களை உணர்ந்து பெற்ற அறிவால் பயனில்லை, அறியாமை உடையவனாகின்றான் என்பதைத் திருவள்ளுவர்,*

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்"**

*என்று கூறியுள்ளார். அறிவின் பயன் பிற உயிரைத் தான் உயிர்போல் எண்ணி நலம் செய்தல். பிற உயிர்கட்கு வரும் இடையூற்றை நீக்காமல் தன் வாழ்வுக்காக மட்டும் அறிவை வளர்த்துக்கொள்ளும் அறிவினால் பயனில்லை. அத்தகைய அறிவு உடையவன் அறியாமை உடையவன் ஆகிறான் என்பதைத் திருவள்ளுவர்,*

**"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை"**

*என்று கூறி அறிவு இருந்தும் பயன்படாமையால் வரும் அறியாமையை விளக்கியுள்ளார். அதனை விளக்குவது போல் பிறிதொரு குறட்பா அமைந்துள்ளது. அறிவு எதனையும் ஆராய்வது. மிக நுண்ணிய ஆழமான பொருள்களின் ஆயும்போது கூர்மையான அறிவு என்கிறோம். விரிந்த அறிவால் உலகப் பொருட்களை நன்கு உணர்கிறோம். இவ்வாறு உணர்ந்தாலும் பரவாயில்லை. ஏனெனில் அறிவுக் கூர்மையும் விரிந்த அறிவும் பிறரிடம் அன்பு காட்டி இன்சொல் கூறி நல்லவற்றை செய்வதற்கே. அவ்வாறன்றி, ஒத்துப்பழக வேண்டியவர்களிடத்து வெகுண்ட சான்றோரால், வெறுக்கத்தக்க செயல்களைச் செய்வோமானால் அறியாமை உடையவர்களாகிறோம் என்பதைத் திருவள்ளுவர்,*

**“அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்**
**வெஃகி வெறிய செயின்”**

*என்று கூறுகின்றார்.*

*அறிய தீய செயல்களுக்குத் துணையானால் அறியாமை உடையவர்களாகிறோம். குழைத்த சுண்ணாம்பும் கடைந்த வெண்ணெய் நிறமும் வடிவில் ஒத்திருக்கின்றன. ஆனால் குணத்தால் வேறுபடுகின்றன. அம்பு பார்வைக்கு நேராகத் தோன்றுகிறது. செயலால் கொடுமை உடையதாக இருக்கிறது. வீணை காட்சிகளாகவும் தெரிகிறது. ஆனால் செயல்படுத்தும்போது இனிய ஓசையைத் தருகிறது. இப்பொருளைக் காட்சி அறிவால் பிரித்து உண்மையை உணர்கிறோம். இதனையே திருக்குறள்,*

**“எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு”**

*எனக்கூறும். இதுபோல சொல்கிற சொற்களாலும் எது உண்மையானது, பயனுடையது என்பதை உணர்தல் வேண்டும். நஞ்சு போலவும் வேப்பங்காய் போலவும் கேட்பதற்குக் கொடுமையும் கசப்பும் உடைய சொற்களால் பெரியோர்கள் நன்னெறி கூறுவர். அதற்குச்* **செவியறிவுறூஉ** *எனப் பெயர். சிலரது சொற்கள் கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கும். ஆனால் அத்தனையும் பின் நமக்குத் துன்பம் விளைப்பதாக இருக்கும். ஆதலின் யார் சொல்கிறார்கள் எதற்காகச் சொல்கிறார்கள் என்பதையும் அச்சொற்களின் உட்பொருள் யாது என்பதையும் உணர்வதே அறிவு என்பதை,*

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு”**

*என்று கூறுகிறது. இத்தகைய மெய்ப்பொருள் உணர்வைப் பெறாமல் மயக்கி மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்யெனக் கருதி*

*இடர்ப்படுவது அறியாமையாகும். அறியாமையால் நில்லாத உலகியல்புகளை நிலையானதாகக் கருதுகிறோம். பற்றுக்களால், ஆசைப்பேயால் அலைகிறோம். இதனால் மயங்குகிறோம். நாம் செய்யும் நல்வினை தீவினைகள் மயக்க உணர்வால் நிகழ்கின்றன. அதனால் பிறப்பு தோன்றுகிறது. எனவே பிறவிக்குக் காரணம் அறியாமை என்பதைத் திருக்குறள்,*

**"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானா மாணாப் பிறப்பு"**

*என்று உணர்த்துகிறது. இவ்வறியாமை நீங்குவதற்குத் தன் கல்வியறிவைப் பெற வேண்டும். கல்வியறிவின் துணைகொண்டு கேள்வியாலும் காட்சிகளும் மெய்ப்பொருளைக் காணவேண்டும். இவ்வுலக இன்பங்கள் நிலையற்றவை. நிலையானது வீடுபேறு என்பதை உணரவேண்டும். இதனையே அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் தாம் அருளிய அவிரோத உந்தியாரில்,*

**"ஆதலால் பெற்ற அறிவால் பெரும்பயன்
ஓதும்வீ டேஎன உந்தீபற
உண்மை நூல் யாவுமென்று உந்தீபற"**

*என்று கூறியுள்ளார். இத்தகைய வாழ்வு பெற்ற சான்றோர்கள் தான் துறவிகள். அவர் கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டு மீண்டு வாரா நெறியாகிய வீட்டினை அடைய முயல்வார்கள். மற்றவர்கள் அறியாமை என்னும் வலையில் சிக்குண்டவர்கள் ஆவார்கள் என்பதைத் திருக்குறள்,*

**"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்"**

*எனத் தெரிவிக்கிறது. எனவே பிறப்புக்குக் காரணம் அறியாமை, அதனை நீக்கிக்கொள்ளும் அறிவே சிறந்தது. அவ்வறிவால் சிவமாகிய செம்பொருளைக் காணலாம்.*

*திருக்குறள் படிப்படியாக அறிவு நிலைகளைக் கூறி முடிவான அறிவு செம்பொருளைக் காண்பது என வற்புறுத்துகிறது. அக்குறள்,*

**"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"**

*என்பதாகும். வீடு என்பது அறிவையும் கடந்து அறிவுக்கு அப்பால் சிந்தையும், மொழியும் செல்லா நிலைமையது. ஆகவே இறையறிவினால் உணர்வதே சிறப்பு என்பதாகும். செம்பொருள் வேறு தான் வேறு என்று அறியும் நிலை மாற வேண்டும். மாறினால் தான் அறியாமை அகலும். இதனை "அறிதோறும் அறியாமை கண்டற்றால்,* என்ற

*உவமையில் காட்டினார். யான், எனது என்னும் செருக்கற்ற நிலை எய்தினால் அறியாமை நீங்கும், அவர்களே ஞானிகள் என்பதை, ''யான் எனது என்னும் செருக்கீர்த்த மகனே மெய்ஞானி'' என்று அவிரோத உந்தியார் கூறும், ஞானிகள் தூய அறிவினர். அவர்களிடத்து இறைவன் நீங்காது உறைகின்றான் என்பதை, ''அறிவொன்றற நின்றறிவார் அறிவில் பிறிவொன்றற நின்ற பிரானலையோ'' எனக் கந்தரனுபூதி கூறும். இத்தகைய நிலையை அடைய வேண்டும் என்றும், எந்த மதத்தினராயினும் எந்நிலையினராயினும் இதனைப் பெறுவதே வேண்டற்பாலது என்றும் அருள்திரு சாந்தலிங்கப் பெருமான்,*

**"எம்மதத்தோர் எந்நிட்டை சொல்லினும்**
**சம்மதமே என்று உந்தீபற**
**தற்போத மாய்க்கும் மேல் உந்தீபற"**

*என அவிரோத உந்தியாரில் கூறியுள்ளார். இந்நிலை செம்பொருள் காண்பதாகும். செம்பொருள் கண்டவர், யான் என்னும் உடற்பற்று களையும் எனது என்னும் உலகப் பற்றினையும் அறுப்பர். அவரே முக்திக்குரியர். இதனை,*

**"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும்"**

*என்று திருக்குறள் கூறுகிறது. எனவே செறிவற்று உலகோடுறை சிந்தையும் அற்று அறிவாற்றறியாமையும் அற்ற பெருநிலையை அடைய விரும்புவதே மனிதப் பிறவி பெற்ற பயனாகும்.*

# 4. இணையத் தமிழ் வளர்ச்சி

**- முனைவர் ப.அர.நக்கீரன்**

## முன்னுரை

*இயல், இசை, நாடகம் என்று மூன்றாக இருந்த தமிழ் அறிவியல் தமிழ் என்று நான்காகவும், கணினித் தமிழ் என்று ஐந்தாகவும் இன்று வளர்ந்திருக்கிறது.*

*கணினியின் வயது அறுபது ஆண்டுகள் தாம். ஆனால், அதன் வளர்ச்சி அறுபது ஆயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியைவிடப் பன்மடங்கு பெரியது. இன்றைய காலகட்டத்தைக் கணிப்பொறி யுகமென்றே கூறும் அளவுக்கு அதன் வீச்சு எல்லாத் துறைகளிலும் கலந்து கரைந்து மேம்பட்டிருக்கிறது. இதேபோல் இன்றைய தமிழின் வளர்ச்சியாலும் அது பெரும்பங்கு ஆற்றி வருகிறது.*

*தமிழைக் கற்பித்தல், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை உள்ளடக்கிய மின்நூலகம் உருவாக்கி அளித்தல், தமிழ் மரபுகளையும், விழுமியங்களையும் காக்கும் பண்பாட்டுக் காட்சியகங்களை ஏற்படுத்துதல், தமிழில் மென்பொருள்களை உருவாக்குதல் என்பன இணையத் தமிழின் நான்முகப் பரிமாணங்களாகும். இவை நேரடியாகப் பயனாளர்களுக்குப் பயன்படும். ஆனால் இதற்குப் பின்னணியில் விசைப் பலகையை உருவாக்குதல், எழுத்துருக்களை உண்டாக்குதல், பயனாளர் களுக்குச் சிக்கலில்லாத, எளிமையான, விரைந்த பயன்பாட்டுக்கு ஏற்ற தேடு பொறிகளையும் செயற்பாடு அமைப்புகளையும் உருவாக்குதல், தொடர்ந்து மேம்பாட்டுக்கான வழிவகைகளைக் கண்டறிந்து அளித்தல் என்பன இடைவிடாத முயற்சிகளாக நடைபெற்று வருகின்றன. இவற்றைப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## கணினியின் தமிழ் கடந்து வந்த பாதை

*1983-84களில் பயன்பாட்டுக்கு வந்த தனியாள் கணினிகளில், தமிழைப் புகுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக ஆதமி* (Adami) *என்ற ஓர் ஆவணங்கள் எழுதும் மென்பொருள் உருவாக்கப்பட்டது. இதனால் ஓர் ஆவணத்தைத் தமிழில் எழுதி அதனை அச்சுப் பதிவு செய்து கொள்ளமுடியும்.*

*இதன் தொடர்ச்சியாக ஆதமி என்ற மென்பொருளும், பாரதி என்ற பொருளும் பயன்பாட்டுக்கு வந்தன.*

*1990களில் எழுத்துருக்களை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுப் பல எழுத்துருக்கள் பயன்பாட்டுக்கு வந்தன. இவை எந்த ஒரு தரப்பாட்டையும்* (Standard) *பெற்றிருக்கவில்லை. இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டன.*

*இந்தக் காலகட்டத்தில்தான் கணினிகளின் வலைப்பின்னலின் பயனாக இணையம் ஏற்பட்டு, மின்னஞ்சலுக்கு வழி வகுத்தது. எழுத்துருக்களில் தரப்பாடு இல்லாததால் தமிழில் மின்னஞ்சல் அனுப்பும்போது, அதனுடன் எழுத்துருக்களையும் அனுப்ப வேண்டிய தேவை இருந்தது. இதற்குத் தீர்வாக வந்ததுதான் மதுரை என்ற மென்பொருள். ஒரு கோப்பில் தமிழ் ஒலிப்பை ஆங்கில எழுத்தில் எழுதி வைத்துக்கொண்டால், அதனைத் தமிழ் வடிவில் திரையில் காட்டும் தன்மை கொண்டது இம்மென்பொருள்.*

*மின்னஞ்சல் வசதி வாய்ந்த நேரத்தில் இணைய யுகத்தின் தொடக்கமும் நிகழ்ந்தது. தமிழில் பல இணையத்தளங்கள் உருவாகத் தொடங்கின. பல வார, நாளிதழ்கள் இணையத்தளத்தில் உலா வர ஆரம்பித்தன.*

*90களில் இறுதியில் இயங்கு எழுத்துருக்கள்* (dynamic fonts) *பயன்பாட்டுக்கு வந்தன. இதன் மூலம் இணையத்தளங்கள் தங்கள் எழுத்துருவையும் சேர்த்தே பயனாளர்களுக்குத் தகவல்களை அளித்து வந்தன. இதனால், எந்தவோர் எழுத்துருவையும் இறக்கம் செய்யாமலேயே இணையத்தளங்களைப் பார்வையிட முடிந்தது.*

*இதன் அடுத்த கட்டமாக, மடலாடல் குழுக்கள் தொடங்கப்பட்டன. பலர் அதில் இணைந்துகொண்டு தமிழ், தமிழ்க் கணினி பற்றிக் கலந்துரையாடினர். பல அறிஞர்களைச் சந்திக்க வைத்த பெருமை இந்தக் குழுக்களுக்கு உண்டு. தமிழ், நெட்* (Tamil.Net) *இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.*

*தரப்பாடு இல்லாமல் பல்வேறு எழுத்துக்கள் பயன்பாட்டில் இருந்த நிலையில், தரப்பாட்டின் தேவை பெரிதும் உணரப்பட்டது. இதன் பயனாக 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் துணையுடன் ஓர் இணைய மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில்* TAB/TAM *என்ற எழுத்துருவும், தமிழ் 99 விசைப்பலகையையும் தரப்பாடுகளாகத் தேர்வு செய்யப்பட்டன. பலர் இதனை ஏற்றுப் பயன்படுத்தத் தொடங்கினர்.*

*2000இல் ஒருங்குறியக் கூட்டமைப்பு* (Univode Consortium) *என்ற நிறுவனம், உலகில் பெரும்பாலான மொழிகளுக்கு அளித்த ஒருங்குறித் தரப்பாட்டைப் பலரும் ஏற்றுக்கொண்டு பயன்படுத்துகின்றனர்.*

இணையத்தில் தமிழ் பயன்பாட்டுக்கும் ஒருங்குறித் தரப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், நூல் வெளியீடு போன்ற மற்ற பயன்பாடுகளுக்கு ஒருங்குறியைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. எனவே, தமிழ் அனைத்து எழுத்துரு - 16 (Tace - 16) என்ற குறியீட்டை உருவாக்கி, அதற்கு ஒருங்குறியக் கூட்டமைப்பின் ஒப்புதலைப் பெறும் முயற்சி இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இணையத்தில் தமிழ்க் கல்வி

தமிழை அரிச்சுவடி முதல் மேற்பட்டப்படிப்பு வரை படிப்பதற்கான வாய்ப்புகள் இணையம் வழியாக ஏராளமாகக் காணக்கிடக்கின்றன. ‘தமிழ் கற்க’ என்ற சொல்லையோ, ‘தமிழ்க் கல்வி’ என்ற சொல்லையோ கூகுள் (Google.Com) போன்ற தேடு பொறிகளில் உள்ளீடு செய்தால், ஆயிரமாயிரம் தளங்கள் தமிழைக் கற்றுத்தர ஆயத்தமாக வரிசையில் நிற்கின்றன.

தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி, எழுதும் முறையைக் கூறிப் பயிற்சி அளிப்பதுடன், அதனை உச்சரிக்கும் முறையையும் ஒளி ஒலிப் பல்லூடகக் காட்சிகளாக இத்தளங்கள் தருகின்றன.

இக்கல்வித் திட்டங்களை வரைமுறைப்படுத்தி, தமிழ்க் கல்வியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை வழங்கத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

மழலைக்கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், பட்டம் என்ற கல்வித் திட்டங்களை இணையம் வழியாக இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. பாடங்கள் அனைத்தும் பல்லூடக வசதிகளைப் பயன்படுத்தி, படிக்க ஆர்வம் ஊட்டும் வகையில், ஆசிரியர் துணையின்றி, எளிய முறையில், தன்மதிப்பீட்டுச் சோதனைகளுடன் கற்கும் வகையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இணைய வகுப்பறை

தமிழை அடிப்படை நிலையிலிருந்து கற்பதற்கான முயற்சிகளுக்கு உதவும் வகையில் த.இ.ப. இணைய வகுப்பறைகளைப் பயன்படுத்துகிறது. அதற்கான விரிவுகளைப் பதிவு செய்து இணையத்தளத்தில் இட்டுள்ளது. தமிழ் கற்கும் முயற்சியில் ஈடுபடுவோர் இரண்டு வகையினராவர். தமிழைப் பேச மட்டுமே தெரிந்து எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ஒரு வகையினர். அப்படிப்பட்டவர்களுக்காக வாய்மொழிப் பயிற்சி, எழுத்துப் பயிற்சிகளைப் பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் வழங்குகிறார்.

தமிழ் பேசவோ எழுதவோ தெரியாத தமிழர்களும், தமிழ் கற்க விரும்பும் பிற நாட்டினரும் மற்றொரு வகையினர். இவர்களுக்கான

எழுத்துப் பயிற்சி, இலக்கணப்பயிற்சி, மொழிப்பயிற்சி ஆகியவற்றை ஆங்கிலம் வழியாகப் பேராசிரியர் தி.ப.சித்தலிங்கையா அவர்கள் வழங்குகிறார்.

தமிழ்க் கல்விக்குப் பயன்படும் வகையில் ஏராளமான குறுந்தகடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

## இணையத்தில் மின் நூலகம்

இணையத்தில் பயன்பாடு வளரத் தொடங்கிய காலத்திலேயே தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைத் தளத்தில் இடும் பணி தொடங்கிவிட்டது. 1998ஆம் ஆண்டு தமிழர் திருநாள் அன்று தொடங்கப்பட்ட மதுரைத்திட்டம் மின்நூலகத்தின் முன்னோடி எனலாம். இதுவரை 200க்கும் மேற்பட்ட நூல்கள் மின் பதிப்புகளாக இதில் உள்ளன.

அதன் பின்னர்த் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகம் உருவாக்கப்பட்டது. இந்நூலகத்தில் பல்வேறு பிரிவுகளில் நூல்கள் அமைந்துள்ளன. இலக்கியப் பகுதியில் சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான இலக்கியங்களும், இலக்கணங்களும் உரையுடன் தரப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்கள் ரோமன் ஆங்கில எழுத்தில் தரப்பட்டுள்ளன. நூல்களின் பாடுபொருள், தேடுபொருள் போன்றவற்றை எளிய முறையில் தேடிப் பெறும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது இந்த மின்நூலகத்தின் சிறப்பாகும். இஃது ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

இம் மின்நூலகத்தில் ஆங்கிலம் - தமிழ், தமிழ் - தமிழ் அகராதிகளும் 2,50,000 கலைச் சொற்களும் உள்ளன.

இதே போன்று www.chennailibrary.com, www.dli.ernet.in, என்ற மின் நூலகங்களும் தமிழ் நூல்களைக் கொண்டு இயங்கி வருவதில் குறிப்பிட்ட சிலவாகும். மேலும் பல தமிழ் மின் நூலகங்களைத் தளத்தில் காணலாம்.

மின் நூலகங்கள் மட்டுமல்லாது, மின் நூல்களை விற்பனை செய்யும் இணையத் தளங்களையும் இன்று காணலாம்.

## இணையத்தில் பண்பாட்டுக் காட்சியகம்

தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களாக உள்ள நாட்டுப் புறக் கலைகள், விளையாட்டுகள், வரலாற்றுச் சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை நினைவில் இருத்துவதற்காக ஒலி ஒளிக் காட்சித் தொகுப்புகளைப் பதிவு செய்து உருவாக்கப்பட்ட பண்பாட்டுக் காட்சியகங்களும் இணையத்தில் உள்ளன.

*தமிழகத்துக் கலைகளான நாட்டியம், கரகம், காவடியாட்டம், மயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், புரவியாட்டம், கும்பி, தெருக்கூத்து, தாலாட்டு ஆகியவற்றின் தரமான காலப் பதிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன.*

## இணையத்தில் சுவடிக் காட்சியகம்

*தமிழ்த்தாத்தா உ.வே.சா. சேகரித்து வைத்திருந்த பழஞ்சுவடிகள், உ.வே.சா. நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, இறையனார் களவியல், சீவகசிந்தாமணி முதலான நூற்சுவடிகள் இப்போது உள்ளீடு பெற்றுள்ளன.*

*வேண்டும் சுவடியைத் தேடிப் பெறும் வசதியும், ஒவ்வொரு சுவடியையும் தனியாகப் பெரிதாக்கிப் பார்க்கும் வசதியும் தரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.*

## விக்கிபீடியா

*தமிழ் விக்கிபீடியா என்பது, இணையத்தில் வளர்ந்து வரும் தமிழ் அறிவுக் களஞ்சியமாகும். பல அறிஞர்களும், பொறியாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் கூட்டாகச் சேர்ந்து தமிழுக்குச் சேர்க்கும் அறிவுக் கருவூலம் இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், வரலாறு, புவியியல், பண்பாடு, கணிதம், சமூகம், மருத்துவம் சார்ந்த பல்வேறு தலைப்புகளில் இன்று 22000க்கும் மேற்பட்ட கட்டுரைகள் இணையத்தில் காணக்கிடக்கின்றன.*

*ஒரு நாளில் ஏறக்குறைய 1 இலட்சம் பேர் அதனைப் பயன் படுத்துகிறார்கள். இங்கு இந்திய மொழிகளுள் தமிழ் இரண்டாம் இடத்தில் உள்ளது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.*

*தமிழ் டிக்சனரி என்ற பன்மொழி அகராதி, தமிழ் விக்கி நூல்கள், தமிழின் மூல நூல்களை, அறிவு மூலங்களைக் கொண்ட விக்கிமூலம், என்பனவும் விக்கி பீடியாவில் அடங்கும்.*

## வலைப்பதிவு / வலைப்பூ

*இணையம் வழங்கும் மின் அஞ்சல், இணைய அரட்டை, இணைய வாணிகம், இணையக் கோப்புப் பரிமாற்றம் உள்ளிட்ட மின் ஆளுமை போன்ற பல்வேறு பயன்களின் விரிவாக இன்று புகழ் பெற்றிருப்பது, வலைப்பதிவு அல்லது வலைப்பூ என்றழைக்கப்படும்* BIOGS *ஆகும்.*

*தம் படைப்புகளைத் தாமே இணையத்தில் பதிப்பிக்கும் வசதியே வலைப்பதிவு ஆகும். பதிவுகளைப் படித்த வாசகர்கள் அதற்கான தம் கருத்துரைகளை உடனடியாக அவ்வலைப்பதிவில் பதிவு செய்து கொள்ளமுடியும். பின்னூட்டங்களுக்குப் பின்னூட்டம் என்று சங்கிலித் தொடர்போல் பதிவு தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கும்.*

*தமிழில் இத்தகைய வலைப்பதிவுகள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. கவிதைகள், கதைகள், இலக்கிய விமர்சகம், அறிவியல் கருத்தாடல் என்று தமிழுக்கு அணியாக இந்த வலைப் பதிவுகள் திகழ்கின்றன.*

### இணைய இதழ்கள்

*அச்சு வடிவில் ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள் கிணற்றுத் தவளையாக இருந்த ஊடகங்கள், இணையத்தின் வழியாக இன்று உலகம் முழுவதற்கும் பயன்படத்தக்க படைப்புகளை, தகவல்களை உலகுக்கு அளித்து வருகின்றன.*

*மேலும் அச்சில் வரும் இதழ்களும், நாளேடுகளும் தங்கள் இதழ்களை மின்னிதழ்களாக வெளியிடுகின்றன.*

*இணைய இதழ்கள் அச்சுவடிவ இதழ்களைப் போலவே பல்வேறு செய்திகள், படைப்புகள், படங்கள் என்பவற்றைக் கொண்டு வெளி வருகின்றன. கீற்று, திண்ணை, பதிவுகள், நிலாச் சாரல், எழில் நிலா, அந்தி மழை முதலியன இணைய இதழ்களாகும்.*

*இலக்கியம், இலக்கணம், சார்ந்த படைப்புகளை உலகின் தலைசிறந்த தமிழறிஞர்கள் அளித்து வருகிறார்கள்.*

### தமிழ் மென்பொருள்கள்

*இன்று ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் பல மென்பொருள்கள் பயன்பாட்டில் உள்ளன. ஆங்கிலத்திலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்க்கும் வசதி, எழுத்தைப் பேச்சாகவும், பேச்சை எழுத்தாகவும் மாற்றும் வசதி, எழுத்துப் பிழைகளைத் திருத்தும் வசதி, அச்சிட்ட பக்கங்களைப் படியெடுத்துப் பதிப்பிக்கும் வகையில் எழுத்துகளை அடையாளம் காணும் வசதி எனப் பல மென்பொருள்கள் ஆங்கில மொழியில் உண்டு. அவற்றைப் போலவே தமிழிலும் மென்பொருள்களைக் கொண்டுவரும் முயற்சிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்முயற்சியில் பல தனியார் நிறுவனங்களும், அரசு நிறுவனங்களும், தமிழ் இணையப் பல்கலைக் கழகமும் ஈடுபட்டுள்ளன.*

*தமிழக அரசும் தமிழ் மென்பொருள் வளர்ச்சிக்கெனத் தனியே ஒதுக்கியுள்ளது. அத்திட்டத்தின் கீழ்த் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் தமிழ் மென்பொருள்கள் உருவமைக்க நிதி வழங்கி வருகிறது. அதன் பயனாகப் பல மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*

## தமிழ் எழுத்துக்களைப் படித்துப் பதிப்பித்தல்

(OCR for Tamil Text)

*அச்சிட்ட தமிழ்ப் பக்கங்களைப் பார்த்து, எழுத்துகளை அடையாளம் கண்டு, மீண்டும் அப்பக்கங்களைத் திருத்திப் பதிப்பிக்கும் வகையில் புதிதாகத் தட்டச்சு செய்ததைப் போலத் தருதல்* (OCR for Printed tamil text) *இதனால் மீண்டும் தட்டச்சு செய்து பிழைதிருத்தும் பணி தேவைப்படாது.*

## ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பு

(Tamil Word Net)

*தனிச் சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் மொழிபெயர்க்க, இம்மென்பொருள் பயன்படுகிறது. நீண்ட தொடர்களை மொழிபெயர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

## தமிழ்ச் சொல்வலை உருவாக்குதல்

(Tamil Word Net)

*இஃது ஒரு தமிழ்ச் சொல்லில் உள்ள உருபன்களைப் பிரித்து ஆராயும் திறன் கொண்டது. நூல்கள் என்ற ஒரு சொல்லை நூல்+கள் என்று இரண்டு உருபன்களாகப் பிரிக்கும்.*

*மேலும் ஒரு சொல்லுக்கு ஈடான பல சொற்களையும், பல பொருள்களையும் தரவல்லது.*

## எடுத்துக்காட்டாக

*படி என்ற சொல்லுக்கு நான்கு பெயர்ச்சொல் பொருள்கள் உள்ளன. அவை,*

***படி:*** *படிக்கட்டு, அளக்கும்படி, வழி, வரவு செலவு,*

*படி என்ற சொல்லுக்கு இரண்டு வினைச்சொல் பொருள்கள் உள்ளன. அவை,*

***படி:*** *படித்தல், படிதல்*

*அகராதி முறையில், இணையத்தில் சொற்களைப் பார்க்கும் முறையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது.*

## தமிழ்ச்சொல் தகவல் தளம்

*அகராதி தொடர்பான ஒரு தகவல் தளத்தை உருவாக்குவதே இம்மென்பொருளின் நோக்கமாகும். ஒரு சொல்லுக்கான பொருளைப் பெறும் வழக்கமான தேவைகளைத் தவிர, உருபன் ஆய்வு, சொல் அடிப்படையிலான அடுக்குகளைப் பெறுதல், ஒரு சொல்லுக்கான ஒலிப்பைப் பெறுதல், ஒரு பெயர் அல்லது வினைச்சொற்களைப் பெறுதல் போன்ற பல்வேறு பயன்களும் இதில் உண்டு.*

*எடுத்துக்காட்டாக, ஒரு சொல்லுக்கு இலக்கண விவரம், பொருள்* (Meaning), *ஒத்த பிற சொற்கள்* (Synonyms), *அடிப்படை* (Paradigms) *ஆகியவற்றைத் தரவல்லது.*

## சொற்களஞ்சிய ஆய்வு (Corpus Analysis)

*தமிழ்த் தரவுத் தள ஆய்வுக் கருவிகளுள் ஒன்றான உருபன் பிரிப்பான் உருவாக்கப்பட்டுள்ளது. இது, தமிழில் பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய நான்கு வகைச் சொற்களையும் பிரித்து உருபன்களைத் தனித்தனியே எடுத்துக்கொடுக்கும். சுமார் 2000 சொற்களுக்கு இது செயற்படுத்திப் பார்க்கப்பட்டது.*

*இதற்காகத் தயாரிக்கப்பட்ட தரவுகளில் முக்கியமானது தமிழ் இலக்கிய விதிகளாகும்.*

*உருபன் பிரிப்பான் உருபன்களாகப் பிரிப்பதோடு, அவற்றின் இலக்கண வகைப்பாட்டையும் காட்டும்.*

*மேலும் இதனால் ர-ற, ல-ள, ண-ன எழுத்துக்கள் உண்டாக்கும் சொல் மயக்கங்களையும், வேறு காரணங்களால் ஏற்படும் பொருள் மயக்கத்தைத் தீர்க்கவும் முடியும்.*

## பேச்சை எழுத்தாக மாற்றுதல்

(Speech to Text synthesis for Tamil)

*பேச்சைப் புரிந்துகொண்டு தட்டச்சு வடிவில் தருவதே இதன் நோக்கமாகும். இது 5000 சொற்களையும், சொற்றொடர்களையும் மாற்றவல்லது.*

*எடுத்துக்காட்டாக, ஒரு விவசாயி கூறுவதைப் புரிந்துகொண்டு இதனால் தட்டச்சு செய்ய முடியும்.*

## கையெழுத்தைத் தட்டச்சாக மாற்றும் மென்பொருள்

*இம்மென்பொருள் கையெழுத்துப் படிவங்களைப் படித்து, எழுத்துகளை அறிந்துகொண்டு அவற்றைத் தட்டச்சு வடிவில் தரவல்லது. இது யாருடைய கையெழுத்தையும் புரிந்துகொள்ள வல்லது.*

*ஒரு பக்கத்தில் உள்ள கையெழுத்துப் படிவத்தின் ஒரு பகுதியையோ படத்தையோகூட இதனால் தட்டச்சு வடிவில் தர முடியும்.*

## செல்பேசிகளில் தமிழில் தகவல் அளித்தல்

*அனைத்துச் செல்பேசிகளிலும், தொடர்வண்டி, வானூர்தி தொடர்பான நேர அட்டவணை, பதிவு விவரம் ஆகிய விவரங்களை இன்று ஆங்கிலத்தில் பெறுவதைப் போலத், தமிழிலும் பெறலாம். மேலும் பல்வேறு நிறுவனங்களின் தற்போதைய பங்குச் சந்தைத் தகவல்களையும் பெறலாம்.*

## செல்பேசிகளில் தமிழ்

*செல்பேசிகளில் தமிழில், குறுந்தகவல்களை அளித்தல், பெயர்களைப் பதிவு செய்தல் பொன்றவற்றுக்கான மென்பொருள். இது இதற்கான விசைப்பலகை வடிவமைப்பும் இதில் செய்யப் பட்டுள்ளது. இம்மென்பொருளின் அடுத்த கட்டமாக, முதல் எழுத்தை உள்ளீடு செய்யும்பொழுது அந்த எழுத்தில் தொடங்கும் சொற்களையும் கணித்துத் தரவல்ல மென்பொருளும் இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது.*

## தமிழ்க் கணினிகள்

*மைக்ரோசாப்ட், லினக்சு போன்ற செயலிகளை ஆங்கிலம் தெரியாதவர்களும், தமிழ் கொண்டே பயன்படுத்தும் பல மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.*

## முடிவுரை

*மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இணையத் தமிழின் சில பரிமாணங்கள் மட்டும் இங்குச் சுருக்கமாகத் தொட்டுக் காட்டப் பட்டுள்ளன. மேல் விவரங்களுக்கு இணையத்தை அணுகப் பரிந்துரைக்கப்படுகிறது.*

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அந்த மொழியைப் பேசும் மக்களின் வளர்ச்சியைச் சார்ந்தே இருக்கும். மக்கள் வளராமல் மொழிமட்டும் வளர்ந்ததாக வரலாறு இல்லை. எனவே, மக்களை வளர்க்காமல், அவர்கள் பேசும் ஒரு மொழியை மட்டும் வளர்க்க முடியாது.

இன்றைய இணையத் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழர் சிலரின் பங்களிப்பே வோர்க் காரணமாக அமைந்திருக்கிறது. தமிழனால் தமிழ் வளர்வதும், தமிழால் தமிழன் வளர்வதும், முடிவில்லாத் தொடர் ஓட்டமாகும். காலத்தால் அழியாது நிலைத்திருக்கும் நம் தமிழ் மொழியை அறிவியல் வளர்ச்சிக்கேற்ப வளர்க்க வேண்டியது தமிழர்களாகிய நம் கடமையாகும்.

## 5. கொங்கு நாட்டார் தமிழ்ப் பணி: காப்பியப் புலவர்கள்

**- முனைவர் இரா.கா.மாணிக்கம்**

*பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதி கொங்கு நாடு என வழங்கப்பட்டது. அப்பண்டைய கொங்கு நாடு இன்றைய கோவை, ஈரோடு, நீலகிரி, தருமபுரி, கிருட்டிணகிரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களையும் பழனி மற்றும் கரூர்ப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.*

*கொங்கு நாடு என்ற பெயர் கொங்கு அதாவது தேன் மிகுதியாகக் கிடைப்பதனால் வந்த பெயர் என்பர். மலைபடு பொருட்கள் கொங்கு என்ற பெயரால் வழங்கப்படுதலின் மலைவளப் பொருட்களால் செழித்த நாடு ஆதலின் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். கொங்கர் என்ற இனத்தவர் இந்த நாட்டை ஆண்டதால் அவர் பெயரால் இப்பகுதி கொங்கு நாடு எனப்பட்டது என்றும் சிலர் கருத்துரைக் கின்றனர். பிற நாடுகளாகிய சேர, சோழ, பாண்டிய நாடுகளின் கங்கில் (எல்லை ஓரத்தில்) இருந்தமையின் இது கொங்கு நாடெனப்பட்டது என்று கருத்துரைக்கின்றவர்களும் உண்டு. இயல்பாகவே இந்நாடு நீர்வளம், நிலவளம் குறைந்தது எனினும் வழிவழி இந்த நாட்டின்கண் புலவர்கள் பலர் தோன்றித் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர்.*

*சங்க காலத்தில் இருந்த அந்திகந்தரத்தனார் (அந்தியூரைச் சார்ந்தவர்), பெருந்தலைச் சாத்தனார் (பெருந்தலையூரைச் சார்ந்தவர்) தொடங்கிச் சிறப்பொடு பொருந்திய புலவர்களாக முப்பது பேரைச் சங்க காலக் கொங்குப் புலவர்களாகப் புலவர் குழந்தை பட்டியலிடுகின்றார்.[1] இவர்களுக்குப் பிற்பட்டும் இன்றும் இந்த நாட்டில் தமிழறிஞர்கள் பலர் தோன்றியுள்ளனர். இவருள் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப் பாடல்கள், நிகண்டுகள், இலக்கணங்கள், உரைகள் எனப் பல்வேறு வகைகளில் தமிழுக்கு ஆக்கம் தேடியவர்கள் அடங்குவர். தமிழகத்தின் வேறு பகுதிகளில் காணப்படாத இலக்கிய வகைகளை எழுதிய புலவர்கள் கொங்கு நாட்டுக்குச் சிறப்பினைத் தேடித் தந்துள்ளனர். சான்றாகத் "தாய் மகள் ஏசல்" என்ற சிற்றிலக்கிய வகை கொங்கு நாட்டில் மட்டும் காணப்படும் ஒன்றாகும். இப்புலவர் கூட்டத்தின் வரலாறு தனியாக விரிவாக ஆராய்வதற்குரியது. புலவர் இரா.இளங்குமரன்*

இன்றைய கொங்குப் புலவர்களுள் ஒன்பது பேரைப் பற்றிக் "கொங்கு நாட்டுப் புலவர்கள்" என்றொரு நூல் செய்துள்ளார். ஆனால் அஃது ஓர் அறிமுக நூலாக மட்டுமே அமைந்துள்ளது.[2]

இக்கொங்கு நாட்டுப் புலவர் குழுவில் காப்பியம் பாடிய புலவர்கள் பற்றிய செய்திகளை அறிமுகப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காப்பியம், புராணம், இதிகாசம் என்ற இலக்கிய வகைகள் ஒரே தன்மையனவாகக் கொள்ளப்படினும் அவற்றிடையே நுட்பமான சில வேறுபாடுகளும் உள்ளன.

"புராண இலக்கியங்கள் பெருங்காப்பிய வகையைச் சார்ந்தன. வடமொழியிலுள்ள புராண நடை வேறு; தமிழ்மொழியிலுள்ள புராண நடை வேறு. வடமொழியிலே உள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன. தமிழ்ப் புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வடமொழியில் காவியங்கள் தனியே இயங்குவன."[3]

இருப்பினும் இந்த மூன்று பிரிவுகளையும் சார்ந்த பெருநூல்களைக் காப்பியம் என்றே கொள்ளும் மரபு தமிழிலக்கியத்தில் உண்டு. பெரிய புராணத்தைக் காப்பியம் என்று கூறும் முறைமையை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

ஆனால், தமிழில் உள்ள புராணங்கள் அனைத்தும் காவியப் பாங்குடையன எனக் கூற முடியாது. எனவே, தல புராணங்கள் பல தனியான ஆய்வுக்குரியன. கொங்குநாட்டில் மட்டும் ஏறத்தாழ இருபத்தேழு தலபுராணங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் கச்சியப்பரின் பேரூர்ப் புராணமும் சைவ எல்லப்ப நாவலரின் தீர்த்தகிரிப் புராணமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.[4]

கொங்கு நாட்டுப் புலவர்கள் செய்த காப்பியங்களுள் தகடூர் யாத்திரை தொன்மையானது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெருங்கதை சிறப்பானது. பின்னர்த் தோன்றிய பக்தமான்மியம் பக்தி சார்பானது. அண்மைக் காலத்திய இராவண காவியம் இராம கதையை எதிர்த்துப் புரட்சி செய்த புதுமையுடையது. திருவள்ளுவர் காவியம் பொதுமையறம் வலியுறுத்த வகுக்கப்பட்டது.

இவையன்றி வாய்மொழிக்கதை வடிவிலான அண்ணன்மார் சாமி கதையும் இராமனின் வரலாற்றை உடுக்கையடிப் பாடலாக ஆக்கியுள்ள தக்கை இராமாயணமும் சிறப்பானவையாகக் கொள்ளத்தகும் பெருநூல்களாக மிளிர்கின்றன.

*இந்தப் பெருநூல்களுள் தகடூர் யாத்திரை இந்த நாட்டில் நடந்த போர் ஒன்றைப் பின்னணியாகக் கொண்டது. ஆனால் இந்த நூல் முழுமையும் கிடைக்கவில்லை. அண்ணன்மார் சாமி கதை இந்த மண்ணைப் பற்றிய கதை. இது கொங்கு நாட்டில் நடந்த வரலாற்றுக் காப்பியம். பேரூர்ப் புராணம் இந்த நாட்டின் பெருமைமிக்க தலமாகிய பேரூரைக் குறித்த தல புராணம். பிறவெல்லாம் கொங்கு நாட்டுப் புலவர்கள் பாடிய காவியங்களேயன்றி இந்த மண்ணிற்குரியவை அல்ல. கதைத் தலைவர்களும் கதை நிகழ்ச்சிகளும் தமிழகத்தைச் சாராது வடநாட்டுக்கு உரியவையாக அமைந்துள்ளன. திருவள்ளுவர் காவிய நிகழ்ச்சிகள் வெளிநாடுகளிலும் நடைபெறுகின்றன.*

### தகடூர் யாத்திரை

*தருமபுரி என்று இன்று வழங்கப்படும் ஊரின் பழைய பெயர் தகடூர் என்பதாகும். இத்தகடூர் கொங்குக் குறுநில வேந்தனும் கடையெழு வள்ளல்களில் ஒருவனுமாகிய அதியமான் என்பானின் தலைநகராகும். இவன் சேரன் பெருஞ்சேரலிரும்பொறைக்குத் தம்பி முறைமையுடையவன். இச்சேரன் தகடூர் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றான். எனவே தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறை என்று பாராட்டப்படுகின்றான். இந்தப் பங்காளிப் போரைக் கருவாகக் கொண்டு பாடப்பட்டதே தகடூர் யாத்திரை என்ற நூலாகும். இந்த நூலுக்குப் பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தும் மூலமாக இருந்திருக்கக்கூடும்.*

*வடமொழியில் "யாத்திரை" என்னும் சொல் படையெடுத்துச் செல்லும் "மேற்சேறல்" என்னும் பொருளைக் கொண்டது. ஆனால் பின்னாளில் இச்சொல் கடற்பயணம், கூத்து, திருவிழா, பிரயாணம் ஆகிய பொருள்களிலும் வழங்கியது. இப்பொருள்களோடு தகடூர் யாத்திரை என்ற சொல்லின் பொருள் பொருந்திவாராமையால் சிலர் இந்த நூலைத் "தகடூர் மாலை" என்று திருத்தவும் முயற்சி செய்தனர். இதனை வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது நூலில் தெரிவித்துள்ளார்.[5]*

*தொல்காப்பிய உரைகாரர் நச்சினார்க்கினியர் இதனைத் தொடர் நிலைச்செய்யுள் என்கிறார்.[6] 'தொன்மை' என்னும் வனப்புக்குச் சான்றாக இதனைக் காட்டும் உரையாசிரியரான பேராசிரியர் இதில் உரைநடை மிகுந்து வந்திருந்ததைச் சுட்டுகிறார். "பாட்டு வருவது சிறுபான்மையாகலின் அவை தகடூர் யாத்திரை போல்வன"[7] என்பது அவர் குறிப்பு. இதில் பிறபாடை, தழுவிவந்த பகுதிகளும் இருப்பதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார்.[8]*

*இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. புறத்திரட்டில் தொகுக்கப் பட்டுள்ள 44 பாடல்களும் உரையாசிரியர்கள் மேற்கோளாகக் காட்டியுள்ள பாடல்களும் சேர்ந்து 49 பாடல்கள் கிடைத்துள்ளன. இந்நூல் வெண்பா, ஆசிரியப்பா ஆகிய இரு யாப்புகளையும் கொண்டது.*

*இதன் ஆசிரியர் வரலாறு, இது தோன்றிய காலம் முதலியன குறித்துத் தெரியச் சான்றுகள் இல்லை. நூல் முழுமையும் கிடைக்காமையின் நூல் அமைப்பு, அது தரும் செய்திகள் குறித்தும் அறியமுடிவதில்லை. ஆயினும் இதன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என்கிறார் வையாபுரிப் பிள்ளையவர்கள்.*[9]

*கிடைத்துள்ள பாக்களைக் கொண்டு பார்க்கையில் அரிசில்கிழார், பொன்முடியார் முதலிய சங்கப்புலவர்களும், சில அரசர்களும் அதியமானின் படையைச் சேர்ந்த பெரும்பாக்கனும், சேரனின் படைத் தலைவன் நெடுங்கேரளனும் இந்த நூலில் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகின்றது.*

*இந்நூலாசிரியர் கவிநயம் மிக்க பாடல்களை எழுதும் திறனுடையவர். இதனை நெடுங்கேரளன் இறந்தபோது அவன் தாய் புலம்பிய,*

**“எற்கண் டறிகோ? எற்கண் டறிகோ?**
**என்மக னாதல் எற்கண் டறிகோ?**
**கண்ணே கணைமூழ் கினவே; தலையே**
**வண்ண மாலை வாளிவிடக் குறைந்தன**
**வாயே பொருநுனைப் பகழிமூழ்கலிற் புலால்வழிந்து**
**ஆவ நாழிகை யம்புசெறித் தற்றே!**
**நெஞ்சே வெஞ்சரம் கடந்தல; குறங்கே**
**நிறங்கரந்து பல்சரம் நிறைந்தன; அதனால்**
**அவிழ்பூ அப்பணைக் கிடந்தோன்**
**கவிழ்பூங் கழிற்றிண் காய்போன் றனனே”**[10]

*என்ற பாடல் கொண்டு அறியலாம்.*

## கொங்கு வேளிர்

*கொங்கு நாட்டாரின் தமிழ்ப்பணிக்குப் பெருமை சேர்க்கும் பெருங்கதையைச் செய்தவர் கொங்கு வேளிர்’. இவரது இயற்பெயர் தெரியவில்லை. பிறந்தநாடு மற்றும் குலத்தால் பெயர் பெற்று இவர் கொங்கு வேளிர் என வழங்கப்படுகிறார். இவர் விசயமங்கலம் என்ற ஊரினர். விசயமங்கலத்தில் உள்ள சமணத் தீர்த்தங்கரரின் கோவிலாகிய*

*சந்திரபிரபாத் தீர்த்தங்கரரின் கோயிலுள் இவரது சிலை காணப் படுகின்றது. எனவே இவர் சமணசமயம் சார்ந்தவர். ஆய்வாளர்கள் இப்புலவரது காலத்தைக் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என முடிவு செய்துள்ளனர்.*

*கொங்கு மண்டலச் சதகம் இவரது பெருமையைக் கீழ் வரும் பாடலால் புகழ்கிறது.*

**“நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்**
**கோதற்ற மங்கையில் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி**
**மேதக்க சொல்சங் கத்தார் வெள்கவே கொங்கு வேள் அடிமை**
**மாதைக் கொடுத் தரஞ்சொன் னதுவுங் கொங்கு மண்டலமே”[11]**

*‘கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவிபாடும்’ என்பது போன்று ‘வேளிரின் வீட்டு வேலைக்காரியும் சங்கப் புலவரின் ஐயங்களை நீக்கினாள்’ எனின் வேளிரின் புலமைத்திறத்தைக் கூறலும் இயலுமோ? இவர் செய்த பெருங்கதை வடமொழிக் காப்பியமாகிய ‘பிருகத்கதா’வின் தமிழ் வடிவம். எனவே இவர் வடமொழிப் புலமையும் நிரம்பியவர் எனலாம். மேலும் இவர் இடைச்சங்கப் புலவர்களால் செய்யப்பட்ட பல செய்யுள் இலக்கணங்களை ஆராய்ந்து நூல் செய்தார் என அடியார்க்கு நல்லாரால் சிறப்பிக்கப்படுகிறார்.”[12]*

*பெரிய கதைகளை வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கும் புதிய மரபைத் தொடங்கி வைத்த புரட்சியாளர் கொங்கு வேளிர். இவரது வழியிலேயே பின்வந்த காப்பியங்கள் அனைத்தும் வடநாட்டுக் கதையை மூலமாகக் கொண்டன. இதில் விலக்காக அமைவது பெரிய புராணம் மட்டுமே.*

*குணாட்டியார் முதன் முதலில் “பிருகத்கதா” என்ற பெயரில் இக்காவியத்தைப் பைசாச மொழியில் எழுதினார். இதனைக் கங்க மன்னன் துர்விநீதன் அதே பெயரில் வடமொழியில் செய்தான். இந்த வடமொழிக் கதையை அதே பெயரைத் தமிழ்ப்படுத்திக் கொங்கு வேளிர் செய்தார். இக்காப்பிய நாயகர்கள் உதயணனும் அவனது மகன் நரவாணதத்தனுமாவர். இவர்கள் வட இந்தியாவில் வாழ்ந்த மன்னர்கள். இவர்கள் குறித்த நூல்கள் வடமொழியில் பல உள்ளன. தமிழில் பெருங்கதை, உதயண குமார காவியம், வச்சத் தொள்ளாயிரம் என்பன இவர்களைப் பற்றிய நூல்களாகும். இம்மூன்றனுள் பெருங்கதை காப்பியத் தகுதி படைத்தது. உதயண குமாரகாவியம் ஐஞ்சிறு காப்பியத்தில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. வச்சத் தொள்ளாயிரம் முழுமையும் கிடைக்காத நூலாக உள்ளது.*

பெருங்கதை உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவகாண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்று ஆறு காண்டங்களைக் கொண்டதாதல் வேண்டும். ஆனால் இப்போதுள்ள பெருங்கதையின் முதற்காண்டத்தின் முதற்பகுதியும், நரவாணகாண்டத்தின் பிற்பகுதி மற்றும் துறவுக் காண்டமும் முழுமையாகக் கிடைக்கவில்லை. மேலும் கிடைத்துள்ள பகுதிகளில் சிற்சில இடங்களும் சிதைந்துபோய் உள்ளன.

இக்காப்பியம் அகவற்பாவால் ஆனது; அந்தாதித் தொடை அமையப் பெற்றது; உரையாசிரியர்கள் பலரும் மேற்கோளாகக் காட்டும் பெருமை பெற்றது; நூற்றுக்கு மேற்பட்ட கதாபாத்திரங் களையும், ஏராளமான நிகழ்ச்சிகளையும் உடையது. இந்நூலுள் பல கதைகள் ஒன்றுக்குள் ஒன்றாய்க் கட்டுக்கோப்புடன் கூறப்பட்டுள்ளன. கொங்கு வேளிரின் கதை புனைதிறனுக்கு இது சான்றாக அமைகின்றது.

இக்காப்பியம் வடநாட்டுக் கதையாயினும் தமிழ் மரபுகள் மாறாவண்ணம் ஆசிரியர் இதனைச் செய்துள்ளார். சான்றாக உதயணன், வாசவதத்தை திருமணத்தைக் களவுவழி வந்த கற்பு மணமாக (தமிழ் அகப்பொருள்) வேளிர் அமைக்கின்றார். வடநாட்டுக் கதைக்குத் தமிழ் அக மரபை முதன்முதலில் கொங்கு வேளிர் ஏற்றிப் புதுமை படைக்கப் பின்வந்த காப்பியங்களில் திருத்தக்க தேவரும், கம்பரும் இதனைத் தழுவிக் கொள்வதைக் காண்கிறோம்.

பல்வேறு இடங்களிலும் வடபுலம் தமிழகமாவதைக் காண்கிறோம். கொங்குநாட்டுப் பண்பாடுகளும் இதில் மிளிர்கின்றன.

**"அந்நாளைய நாகரிக வாழ்வின் சிறப்பெல்லாம்,**
**வகையெல்லாம் இந்த நூலில் விளங்குவது போல்**
**வேறெந்தத் தமிழ் நூலிலும் விளங்குவதில்லை"[13]**

என்று பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் சொல்லும் மதிப்புரை இக்காப்பியப் பெருமைக்குக் கட்டியம் கூறுகிறார்.

### எம்பெருமான் கவிராயர்

கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் கம்பரின் இராம காதையை எளியோரும் ஏற்கும் வண்ணம் நாட்டார் இசைப்பாட்டில் தக்கை இராமாயணமாகச் செய்தவர் எம்பெருமான் கவிராயர். இவர் பத்தர்பாடி என்ற ஊரினராக இருத்தல் வேண்டும். இந்த ஊர் சங்ககிரி துர்க்கத்திற்கு அருகில் இருந்த ஊராக இருக்கக் கூடும். காரணம் இப்புலவர் சங்ககிரியில் கச்சேரி அதிகாரம் செய்துவந்தவர். பின்னர்

*உயர் பதவி பெற்று மதுரைக்கு மாற்றலாகிச் சென்றார். அங்கே அப்பகுதியைச் சேர்ந்த அழகர் கோயிலில் தம் குலப் பெண்ணாகிய (இடையர்குலம்) பூங்கோதை என்பாரை மணந்தார். மீண்டும் சங்ககிரி வந்த இவர் இந்தத் தக்கை இராமாயணப் பனுவலைச் செய்தார். இவர் தம் மனைவியார் பூங்கோதையாரும் கல்வி நலம் வாய்ந்தவர். வடமொழிப் பயிற்சியும் வேதாந்த ஞானமும் நிறைந்தவர். இப்பெண்மணி அத்வைத ஞானநூல் ஒன்றும் இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. எம்பெருமான் கவிராயர் தக்கை இராமாயணம் பாடத் துணையாக இருந்து ஆதரித்தவர் நல்லதம்பிக் காங்கேயன் என்பவர். இப்புரவலர் திருப்பணிகள் பல செய்தவர். மேலும் சிறந்த கலை இரசிகரும் ஆவார். இவர் தூண்டுதலே தக்கை இராமாயணம் உருவாகத் துணையாயிற்று. இவரது காலம் கி.பி. 1600ஐ ஒட்டியது. எனவே கவிராயர் கி.பி. 17ஆம் நூற்றாண்டினர் எனலாம். இந்த நூல் சங்ககிரி வரதராசப் பெருமாள் திருக்கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. கம்பரைப் போன்றே கவிராயரும் தம்மை ஆதரித்த புரவலரை நன்றியுடன் தமது நூலில் போற்றியுள்ளார்.*

*தக்கை என்பது ஓர் இசைக்கருவி. இது கொங்கு நாட்டில் பெருவழக்கில் இருந்தது ஒன்று. இசைத்துறையில் இக்கருவி அகப்புற முழவில் அடக்கப்படுகின்றது. கொங்கு நாட்டுப் பிரபந்தங்களில் திருச்செங்கோட்டுப் பள்ளு, குருச்சேத்திர நாடகம், அரிச்சந்திர நாடகம் ஆகியவற்றுள் தக்கை அடித்துப்பாடும் பாடல்கள் சில உள்ளன. பனை எழுபது என்ற நூலும் தக்கையடிப் பாடல்களைக் கொண்டது. கொங்கு நாட்டு இன்னொரு சிற்றிலக்கியமான கபிலகதை நூறு தக்கைப் பாடல்களால் ஆனது. இதன் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாட்டார் இலக்கிய வகையில் உருவான இத்தக்கை இராமாயணம் தமிழுக்குப் புதுமை சேர்த்த பெருமை கொண்டது. பாமரரை நோக்கிச் செய்யப்பட்ட இந்த இசைக் காவியம் புதிய அமைப்பை இலக்கிய உலகில் தோற்றுவித்துள்ளது. கதாகாலட்சேப முறையில் வில், உடுக்கை போன்ற கருவிகள் துணை கொண்டு கதைகள் கூறப்படுவன போன்று தக்கையைத் துணையாகக் கொண்டு பாடப்படும் இராமகதையே தக்கை இராமாயணமாகும்[14]. கம்பனின் பத்தாயிரம் பாடல்கள் இந்த நூலில் 3250 பாடல்களாகச் சுருக்கப்பட்டுள்ளன. இந்த நூலுள் கம்பன் பாடல்கள் அடி பிறழாமல் முழுமையாக அப்படியே வருமிடங்களும், சொற்களும் தொடர்களும் மாறாமல் வருமிடங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இவ்வாசிரியர் தம் கவித்திறனுக்கு ஓரிரு சான்றுகளே போதும். சீதையின் பேரழகு,*

"நற்பொருளைச் செழுந்திருவை நாரியார்க்கெல்லாம் அரசைப்
பொற்பொலிவை இன்னமுதப் புலன் சுவையைப் பூமணத்தைச்
சொற்பொருளை அயன் முதலோர் துதித்து நல்லோர்க் குவமை சொல்லும்
இற்பொலிவைப் புகழ என்றால் யாரை வேறுவுவமை சொல்வேன்"[15]

*என்று போற்றப்படுகிறது. "அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்" என்ற கம்ப சித்திரம் தக்கையில் "மாது தன்னை வள்ளல் கண்டான்; வள்ளலையும் மாது கண்டாள்"[16] என்று பாடப்படுகிறது.*

"இது போலும் இலக்கிய வகை இவர்க்கு முன்னும்
இல்லை; பின்னும் உண்டாகவில்லை. இவர் படைப்பை
இசைத்தமிழ்க் காப்பியம் எனலாம்"[17]

*என்று இதன் பதிப்பாசிரியர் கூறுவது நடுநிலையான ஆய்வுக் கூற்றே எனலாம்.*

### கந்தசாமி சுவாமிகள்

*"பக்த மான்மியம் என்ற பக்திக் காவியம் பாடிய இச்சான்றோர் கோவைக்கு அடுத்த சரவணம்பட்டியில் கலியுகம் 1994 நந்தன ஆண்டில் (கி.பி. 1928) வேளாளர் குலத்தில் அவதரித்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கடசாமிக் கவுண்டரும், குட்டியம்மையும் ஆவார்கள். இவர் அருள் நிறைந்த இராமானந்த சுவாமிகளைச் சரணடைந்து அவரையே குருவாக ஏற்றுத் தீட்சையும் பெற்றுக்கொண்டார். தம் குருவின் ஆணைப்படி பாடிய இந்தப் பக்த மான்மியத்தின் ஒவ்வொரு கதி முடிவிலும் "இராமானந்தப் பெயர் கொடு எனது இதயத்திலங்கும் பெருமாளே" எனத் தம்குருவை வழிபடல் இவரது குருபக்திக்குச் சான்றாகும்.*

*இப் பக்தமான்மியம் ஒரு தழுவல் நூலாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன் மிதிலாபுரியில் அருளப் பெற்ற "பக்த மாலா" என்பது இதன் மூல நூலாகும். அந்நூலுள் வைணவம், சாக்தம், சைவம் சார்ந்த பக்தர்களின் சரிதம் கூறப்படுகின்றது. இம் மூன்றும் சமயப் பக்தருள் வைணவ பக்தர்களின் வரலாற்றை மட்டும் பக்த மான்மியம் உரைக்கின்றது.*

*பக்தமான்மியம் என்றால் பக்தரது பெருமை என்பது பொருளாம். இப்பக்தர் பிராசீனபக்தர் எனப்படுகின்றனர். பிராசீனம் என்றால் பழமை. எனவே பழங்காலத்திலிருந்த பக்தரது மகிமையை உணர்த்துவது இந்நூலில் கருத்தாம். இந்நூலுள் ஒவ்வொரு அடியாருடைய வரலாறும் 'கதி' என்று அழைக்கப்படுகின்றது. 'கதி' என்பதற்குப்*

பலபொருள் இருப்பினும் படலம், பிறப்பு, பரம கதி, மோட்சம் என்ற பொருள்கள் இவ்விடத்தில் கொள்ளத்தகும் பாங்கில் அமைந்துள்ளன.

பெரியபுராணத்தில் சேக்கிழார் நாயன்மார்களின் பக்தி வரலாற்றைப் பாடியது போன்று இப்பக்தமான்மியத்தில் ஸ்ரீகந்தசாமி சுவாமிகள் வைணவ அடியார்களின் வரலாற்றைப் பாடியுள்ளார். சேக்கிழார் ஒவ்வொரு நாயன்மார் புராணத்தின் இறுதிப் பாட்டிலும் அடுத்த நாயன்மாரைச் சொல்லி அவரது வரலாற்றைச் சொல்லப் போகிறேன் என்று பாடுவார். ஆனால் பக்த மான்மியத்தில் இம்முறை சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. இந்நூலின் ஒவ்வொரு கதியின் முதற் பாடலிலும் சென்ற கதியில் இன்னவரைப் பாடினேன்; இனி இவரைப் பாடப்போகிறேன் என்று நூலாசிரியர் உரைப்பார். இது இவ்விரு நூல்களுக்கிடையேயான வேறுபாடாம்.

பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், சந்திரதத்தர் வரலாறு, பிராசீனபக்தர் தொகை என்ற நான்கு பகுதிகளும் முதலில் அமைய அடுத்து நாபதாசர் தொடங்கி வருணனை இறுதியாக 98 கதிகள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. விருத்தப்பாவால் இயன்ற இது 7367 பாடல்களைக் கொண்டது. சிரவணபுர கௌமார மடம் இந்நூலைப் பதிப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் தோன்றிய இராமானுசர் தவிர இக்காவியம் கூறும் வைணவ பக்தர்கள் அனைவரும் வட நாட்டைச் சார்ந்தவர்களே. இராமாயணம், பாரதம், குரு பரம்பரை, அரிசமய தீபம், பக்த விஜயம், பக்த லீலாமிர்தம் முதலிய நூல்களில் கூறப்பட்ட செய்திகள் இதில் இடம் பெறுகின்றன. இத்தோடு சில புதிய செய்திகளையும் ஆசிரியர் சேர்த்துள்ளார். சான்றாக இராமாயணம் மற்றும் பாரதம் சொல்லாத சில செய்திகளை இவர் முறையே வீடண கதியிலும் விதுரமங்கை கதியிலும் கூறியுள்ளார்.

இந்நூல் வைணவ பக்தர்களைக் கூறினும் சமய போத தன்மையற்றது. இந்நூலின் முதற்பாடல் பொதுக் கடவுள் வாழ்த்து என்றே குறிக்கப்படுகின்றது. இச் சான்றோர்கள் சாதி, மொழி, இனம் முதலிய குறுகிய வட்டங்களைக் கடந்து வாழ்ந்தவர்கள்.

இந்நூலாசிரியர் இந்நூலன்றி இரத்தினாசலக் கடவுள் யமக அந்தாதி, மருதாசல யமக அந்தாதி, சந்தப்பதிகம், அவிநாசிப் பிரபந்தங்கள் முதலியன செய்துள்ளார். இவற்றுள் சில இன்னும் அச்சில் வரவில்லை.

## புலவர் குழந்தை

*வால்மீகியின் இராமாயணம் தமிழில் பல்வேறு முறைகளில் செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட இராமகாதையின் எதிர் நூலாக இராவண காவியம் செய்தவர் புலவர் குழந்தையவர்கள். இவர் கோவை மாவட்டம் ஓலவலசு என்னும் ஊரில் 01-07-1906ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தம் பெற்றோர்கள் முத்துசாமிக்கவுண்டரும் சின்னம்மையாரும் ஆவர். தமது 10ஆம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்த இவர் 1934இல் சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு முடியப் பவானி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 29 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். ஓய்வுக்குப் பின்னரும் அங்கேயே வாழ்ந்து வந்தார்.*

*1925ஆம் ஆண்டு பெரியாரின் தன்மான இயக்கத்தில் சேர்ந்து பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தவராக ஆனார். இவரைக் "கருப்புச்சட்டைக்காரர்" என்றே அனைவரும் அழைத்தனர். இவர் பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணா, புரட்சிக்கவி பாரதிதாசன் ஆகியவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 1938, 1948 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கு கொண்டார். 1946 முதல் 1950 வரை 'வேளாளன்' என்ற திங்கள் இதழை நடத்தி அதில் விதவை மணம், சீர்திருத்த மணம், கலப்புமணம், பெண்ணுரிமை ஆகியனவற்றை ஆதரித்து எழுதினார். இவர் கொள்கைப் பிடிப்புடையவராதலின் தம் மக்களுக்குச் சமத்துவம், சமரசம் என்று பெயரிட்டழைத்தார்.*

*பெரியாரின் கோட்பாடுகள் மீது இவருக்கிருந்த பிடிப்பு இவரை 'இராவணகாவியம்' பாட வைத்தது. இதன் சிறப்புப் பாயிரத்தைப் பாரதிதாசன் பாடியுள்ளார். ஆராய்ச்சி முன்னுரையை அண்ணா அவர்களும், ஆராய்ச்சி அணிந்துரையைக் கலைஞர் கருணாநிதியவர்களும் எழுதியுள்ளனர். 1946இல் ஈரோடு வேலா பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. ஆனால் இந்நூல் 02-06-1948இல் அத்தடை நீக்கப் பட்டது.*

*இராவணகாவியம் ஐந்து காண்டங்களை உடையது. தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரிகாண்டம், போர்க்காண்டம் என்பன அவை. 57 படலங்களையும், 3100 விருத்தப்பாக்களையும் கொண்டது இந்நூல். மற்ற இராமகாதைகளில் இராமபிரான் உயர்வாகவும், தெய்வமாகவும் போற்றப்பட இந்த*

*இராவண காவியத்தில் இராவணன் சிறந்தவனாகவும், சான்றோனாகவும் உயர்த்தப்படுகின்றான். இருப்பினும் கதை முடிவு இராவணன் உயிர்துறப்பதிலேயே முடிகின்றது.*

*இராமாவதாரச் சிறப்பையும் பெருமையையும் மக்கள் பல நூற்றாண்டுகளாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர். ஆனால் திராவிட இன உணர்ச்சி மற்றும் ஆரியப் பகை காரணமாக இராமனைப் பழித்து எழுதப்பட்ட இக்காவியத்தின் கதைப் பொருள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாமலேயே போய்விட்டது. இருப்பினும் இந்நூலின் கவியழகு அனைவரையும் ஈர்க்கும் ஆற்றலுடையதாக உள்ளது.*

*புதிய துறைகளில் தமிழ் வளர வேண்டும் என்ற சிந்தனை கொண்டவர் புலவர் குழந்தையவர்கள். காவியத் தொடக்கத்தைத் தமிழ் வாழ்த்தாகப் பாடியுள்ளார் இவர். பாரதி போல்,*

**"அற்றையநூல் களைப்போற்ற லோடமையாது
அந்நூல்கள் அமைவோடு ஆய்ந்து
கற்றவையின் கருத்துணர்வோடு ஐந்திணையின்
இயற்கையொடு கலந்து நல்லோர்
இற்றைய நாட் கேற்றபடி இலக்கியமும்
இலக்கணமும் இசையும் கூத்தும்
பொற்றகைய பலப்பலவாம் புதுநூல்கள்
செய்துமொழி போற்றல் வேண்டும்"[18]**

*என்றும் ஆசைப்படுகிறார்.*

*புலவர் குழந்தை இக்காவியம் போகச் செய்யுள் நூல்கள் ஆறும்,[19] உரைநடை நூல்கள் பதினாறும் செய்துள்ளார். மேலும் உரையாசிரியராகவும் விளங்கியுள்ளார். இவரது சில சிறந்த நூல்கள் (அடிவேட்டை, நல்லதம்பிச் சர்க்கரை தாலாட்டு, திராவிட மகா காவியம்) இன்னும் அச்சில் வரவில்லை.*

### அ. கிருஷ்ணசாமி நாயுடு

*இவ்வறிஞர் கோயமுத்தூர்ப் பூளைமேட்டில் இருந்து ஆசிரியப்பணியும் தமிழ்ப்பணியும் செய்தவர். பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்கற்ற இவர் ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆகிய மொழிகளிலும் வல்லவர். சிறந்த கவிஞரும் சொற்பொழிவாளரும் ஆய்வாளருமாய்ப் பெயர் பெற்ற இவர் திருவள்ளுவர் காவியம் பாடிய பெருமைக்குரியவர்.*

**“அன்பார் அனுப்பபப்பட்டி, அ.கிருஷ்ணசாமிநாயுடு**
**இன்பார் பலகலைதேர் எண்வடுகன் - நண்பாரும்**
**பண்பூற வள்ளுவர் காவியம் பாடினான்**
**எண்பூளை மேட்டில் இருந்து”[20]**

*என்ற பாடல் இதனைத் தெரிவிக்கும்.*

*திருவள்ளுவர் காவியம் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டது. சேர நாட்டு வள்ளுவ நாட்டில் பிறந்த குறளாசான் குமரி முதல் இமயம் ஈறாகப் பல இடங்களுக்கும் சென்று நன்னெறி புகட்டியதோடு ரோம் நகரம் சென்று அறங்கூறி வள்ளுவர் நெறி நிறுவித் தாயகம் மீள்வது ஈறாக அவரது வாழ்வைக் கற்பித்துக் கூறுவது இந்நூல்.*

*கங்கைக்குப் பொன்னி என்று பெயர் சூட்டியது, காசியில் ஆரியரிடையே இருந்த சாதி வேறுபாடுகளையும், வேள்விகளையும் ஒழித்து அடயோகிகளைக்கண்டு சமுதாயத் தொண்டு செய்ய வற்புறுத்தியது, இயற்கைத் துறவறம் பேணச் சொல்வது, ரோம் நகரில் மூடநம்பிக்கைகளை நீக்கியது கிறித்தவர்கள் புலால் உண்ணக்கூடாது என்பதை ஏசுவைக் கொண்டே சொல்லச் சொன்னது, தாயகத்தில் குடியாட்சி மற்றும் பொதுப்பண்ணைகளை உருவாக்கச் சொல்வது, பொருள்களைப் பொதுவுடைமையாக்குதல் ஆகியனவெல்லாம் வள்ளுவர் செயல்களாக இக்காவியம் கூறுகிறது.*

*இக்காவியக்காரர் சமுதாய உணர்ச்சி நிரம்பியவர். அனைத்து வளர்ச்சிகளுக்கும் தடை மக்கட் பெருக்கமே எனத் தெளிந்து,*

**“நூற்றாண்டின் பின்னொரு நூறுக்கு நூறாகக்**
**கூறாண்ட மக்கள் குவிந்திடுவர் தூறதண்ட**
**காடுமலை யன்றிக் கடைநில மாக்கிடினும்**
**ஊடுணவு போதாது உயிர்க்கு”[21]**

*என எச்சரிக்கிறார். ஆனால் அதே வேளையில் மக்கட் பெருக்கத்தைத் தடுக்கச் செயற்கை முறைகளை விரும்பாது மன அடக்கமே வழி எனக் கூறுகிறார். பெண்ணுக்கு 20 வயதையும், ஆணுக்கு 25 வயதையும் திருமண வயதாகக் கூறும் இவர் குழந்தைப் பேற்றுக்கிடையில் ஆறு ஆண்டுகள் இடைவெளி இருக்க வலியுறுத்துகிறார். மேலும் பிறக்கும் குழந்தையும் காந்திபோல் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.*

*வெண்பா யாப்பில் ஆன இக்காப்பியத்தில் குறள் கருத்துக்கள் நிரம்பி வழிகின்றன. கல்விக் காண்டம், யாத்திரைக் காண்டம், முப்பால் காண்டம், உரிமைக் காண்டம், அமைதிக்காண்டம் என ஐந்து*

*காண்டங்களையும், 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும் கொண்டது இக்காவியம். இதன் முதல் பதிப்பு 1958இல் வெளிவந்தது.*

*மேற்குறித்த இக்காப்பியங்கள் போகக் கச்சியப்பரின் பேரூர்ப் புராணமும், சைவ எல்லப்ப நாவலரின் தீர்த்தகிரிப் புராணமும் கொங்கு நாட்டுப் பெருநூல்களே.*

*தமிழகக் காப்பியப் புலவர்கள் வரிசையில் கொங்கு நாட்டுக் காப்பியப் புலவர்கள் நூல் புனைவதில் புதுமையும், புரட்சியும் செய்துள்ளதை மேலே குறிப்பிட்ட காப்பியங்கள் வழி அறிய முடிகிறது.*

## சான்றாதாரங்கள்


1. *புலவர் குழந்தை, கொங்குநாடு.*
2. *புலவர் இரா.இளங்குமரன், கொங்கு நாட்டுப் புலவர்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1979.*
3. *மீனாட்சிசுந்தரம் பிள்ளை த.ச., பேரூர்புராணம். முகவுரை திருவாவடுதுறை ஆதீனம் - திருவாவடுதுறை: 1967, ப. 7.*
4. *புறத்திரட்டு: 776.*
5. *காவியகாலம்: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, பா.171.*
6. *தொல்காப்பியம், புறத்திணையியல், 17 உரை.*
7. *தொல்காப்பியம், பொருளியல், 485 உரை.*


★ ★ ★